ISSN 1391-9504

# விஜய்

Vijey விஜய்

19.01.2011 - மலர் 07, இதழ் 46




## அமெரிக்காவின் இரகசியங்கள் மறைந்துள்ள ‘ஏரியா 51’

வேற்றுக்கிரகவாசிகள் பற்றிய பல மர்மங்கள்

## அதிசய ஆய்வுகூடப் பூங்கா

## புதிய ஆண்டில் முயற்சிகளை ஆரம்பிப்போம்

விலை ரூபா 15/-

விஜய்
ரூ. 3 லட்சம் மதிப்புள்ள பண வவுச்சர்களை வெல்வதற்கும், 10% விலைக் கழிவைப் பெறவும் ஓர் அரிய சந்தர்ப்பம்
விபரம் 9 ஆம் பக்கத்தில்...
Bata
B.first
SCHOOL SHOES

தமிழ்பேசும் பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சங்கத்தின் புதிய நடைமுறை

வெளிநாட்டுப் பயணங்களின்போது ஏற்படும் கஷ்டங்கள், அசௌகரியங்களை அரச பதவியேற்ற சில தினங்களிலேயே ஸ்ரீ விஜயமன்னன் நன்கு உணரத் தொடங்கினான். இதற்கிடையில் மன்னனின் ஆட்சிக்குட்பட்ட பிரதேசங்களில் கறுவா மற்றும் யானைகளை எடுத்துச் செல்ல வர்த்தகசங்கம் அனுமதி கேட்டது. இதனை மன்னர் நிராகரித்தார். கி.பி.1740 ஆம் ஆண்டு கறுவா ஏற்றிச் செல்வதற்காக, வந்த கப்பல்கள் கறுவா இல்லாமல் திரும்பிச் செல்ல வேண்டிய நிலை ஏற்பட்டது. அதன்பின்னர் வர்த்தகசங்கம் மன்னனை சந்திப்பதற்குப் பிரதிநிதி ஒருவரை அனுப்பியது. அப்பிரதிநிதிக்கோ, தாம் வந்த காரணத்தை கூறக் கூட சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. அப்பொழுது ஒல்லாந்தர் அத்தனகலையில் அணைக்கட்டு ஒன்றைக் கட்டிக் கொண்டிருந்தனர்.

மன்னனோ அதனைக் கட்ட வேண்டாம் என ஒல்லாந்த அதிகாரிகளுக்குக் கட்டளையிட்டு அவர்களைத் திருப்பி அனுப்பினான். எனினும், நாட்டின் எல்லைக்குள் வேறு தவறான செயற்பாடுகள் பல நடந்து கொண்டே இருந்தன. வர்த்தகசங்கத்தின் ஆட்சிக்குட்பட்ட மக்கள் வர்த்தகச் சங்கத்திற்கு வரிப்பணம் செலுத்த வேண்டாம் என வற்புறுத்தப்பட்டனர். ஒல்லாந்தர்கள் தமக்குச் சொந்தமான ஊரொன்றில் தேவாலயம் ஒன்றை கட்ட முனைந்தபோது வர்த்தக சங்கத்தினரால் தடுத்து நிறுத்தப்பட்டனர். எனினும், ஒல்லாந்தர் பொறுமையாக இருந்தனர்.

ஒல்லாந்தர்களின் இந்தப் பொறுமையை பலவீனமாக மன்னன் தரப்புப் பார்த்தது. இதற்கிடையில், மன்னனின் கடிதமொன்றை சீயம் நாட்டிற்கு அனுப்பி பதிலைப் பெற்றுத் தருமாறு ஒல்லாந்த ஆள்பதிக்கு வர்த்தகசங்கம் கட்டளையிட்டது. ஒல்லாந்த ஆள்பதியோ அக்கோரிக்கையை நிறைவேற்றிக் கொடுத்தார். அதன்பின் மன்னன் அரச அதிகாரிகளை அனுப்பி சியெனே கோரளையில் ஏழு ஊர்களைக் கைப்பற்றினான்.

ஆள்பதியோ, அது குறித்து முறைப்பாடு மாத்திரம் செய்துவிட்டு அமைதியாக இருந்துவிட்டார். இக்காலகட்டத்தில் நீர்கொழும்பு மற்றும் கற்பிட்டி ஆகிய இடங்களுக்கிடையில் பொருட்களைக் களவாகக் கடத்தும் கைங்காரியங்கள் பாரிய அளவில் நடைபெற்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பம்:

# மாற்றங்களுக்கு வாய்ப்பு

கடந்த ஆண்டுக்கான உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்து, பல்கலைக்கழக அனுமதிக்காக விண்ணப்பித்திருக்கும் மாணவர்கள் தங்களின் விண்ணப்பப்படிவத்தில் மாற்றங்கள் ஏதும் செய்ய வேண்டி இருப்பின் அதற்கான வாய்ப்பொன்று வழங்கப்படுமென பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் காமினி சமரநாயக்க தெரிவித்துள்ளார்.

அதன்படி, விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளும் முடிவுத் திகதியிலிருந்து மேலுமொரு மாதகால அவகாசம் அதற்காக வழங்கப்படும் எனவும் விண்ணப்பதாரிகள் ஏற்கனவே தாம் விண்ணப்பித்துள்ள கற்கைநெறிகள் அல்லது பல்கலைக்கழகங்களில் மாற்றமேதும் செய்யவேண்டி இருப்பின் இந்த வாய்ப்பைப் பயன்படுத்திக் கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

சில மாணவர்கள் உரிய அறிவுரைகளைப் பின்பற்றாமையாலும் தாம் விண்ணப்பிக்கத் தகுதி பெற்றிருக்கும் கற்கைநெறிகளுக்கு விண்ணப்பிக்கத் தவறுவதாலும் பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம்கொடுப்பதோடு, சிலர் பல்கலைக்கழக அனுமதிக்கான வாய்ப்பையும் இழக்கின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். எனவே, இம்முறை அத்தகைய அசௌகரியங்களை குறைக்குமுகமாகவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# இரு பல்கலைக்கழகங்களில் இரண்டு புதிய கற்கைநெறிகள்

2010/2011 ஆம் கல்வியாண்டுக்கான இரண்டு புதிய கற்கைநெறிகள் இரண்டு பல்கலைக்கழகங்களில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

அதன்படி, சுற்றுலா அபிவிருத்தி எனும் புதிய கற்கைநெறி ரஜரட்ட பல்கலைக்கழகத்திலும் விருந்தோம்பல் முகாமைத்துவம் எனும் கற்கைநெறி சப்ரகமுவ பல்கலைக்கழகத்திலும் ஆரம்பிக்கப்படவுள்ளதாக பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.இக்கற்கைநெறிகளைத் தொடர்வதற்காக மேற்படி இரண்டு பல்கலைக்கழகங்களிலும் நூறு மாணவர்கள் அனுமதித்துக்கொள்ளப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது, இரண்டு பல்கலைக்கழகங்களில் மாத்திரம் ஆரம்பிக்கப்படவுள்ள இக்கற்கை நெறிகளை எதிர்காலத்தில் ஏனைய பல்கலைக்கழகங்களிலும் ஆரம்பிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளதாகவும் அறியக்கிடைக்கின்றது.

விஜய்
Vijey
விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்
08, ஹுணுப்பிட்டிய குறுக்கு வீதி,
கொழும்பு - 02
தொலைபேசி: 2479653,
மின்னஞ்சல்: Vijey @ Wijeya.lk



## மாவட்ட அடிப்படையிலான ஆங்கில ஆசிரியர் பயிற்சி

அரசாங்கப் பாடசாலைகளில் நிலவும் ஆங்கில ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் மாவட்ட அடிப்படையில் ஆங்கில ஆசிரியர் பயிற்சி மையங்களை அமைப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக கல்வி அமைச்சின் செயலாளர் எஸ்.ஏ குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்திய அரசாங்கத்துடன் இணைந்து ஆரம்பிக்கப்படவுள்ள இந்தப் பயிற்சி மையங்களில் பயிற்சி பெறுவதற்காக, தற்போது பாடசாலைகளில் கடமையாற்றுகின்ற ஆங்கிலத்தை கற்பிக்கக்கூடிய திறமையுள்ள ஆசிரியர்கள் இனங்காணப்பட்டு, ஆறு மாதகாலங்களுக்கு அவர்களுக்கு உரிய பயிற்சி வழங்கப்படவுள்ளது. இவ்வாறு பயிற்சி பெறுபவர்கள் ஆங்கிலம் கற்பிப்பதற்காக நியமிக்கப்படவுள்ளனர் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். இத்திட்டத்தின்கீழ் மாவட்ட மட்டத்தில் 20 ஆங்கிலப் பயிற்சி மையங்கள் நிறுவப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

# 'ருபெல்லா' தடுப்புமருந்து விரும்பினால் மட்டும்......

13 வயதுக்கு மேற்பட்ட ஆண்-பெண் இருபாலாரிலும் விரும்பியவர்கள் ருபெல்லா தடுப்புமருந்தைப் பெற்றுக் கொள்ளலாம் என கொழும்பு தொற்று நோய்ப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, சுகாதார மருத்துவ அதிகாரி நிலையங்களினூடாக, விரும்பியவர்களுக்கு மத்திரமே ருபெல்லா தடுப்பு மருந்து ஏற்றப்படும் என கொழும்பு தொற்றுநோய்ப் பிரிவின் சிரேஷ்ட அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பாடசாலை மாணவர்களுக்கு பாடசாலைகளில் ருபெல்லா தடுப்புமருந்து ஏற்றும் நடவடிக்கைகள் தற்போதளவில் நிறுத்தப்பட்டுள்ளதோடு, சுகாதார மருத்துவ



அதிகாரி நிலையங்களினூடாகவே, அதனை வழங்கத் தீர்மானித்திருப்பதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# வடக்கில் இயங்காமல் இருக்கும் முஸ்லிம் பாடசாலைகளை ஆரம்பிக்க நடவடிக்கை



கடந்த காலங்களில் வடக்கில் நிலவிய அசாதாரண சூழ்நிலைகளின் காரணமாக அங்கு இயங்காமல் இருந்த முஸ்லிம் பாடசாலைகளை கல்வி நடவடிக்கைகளுக்காக மீண்டும் ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக கல்வி அமைச்சின் முஸ்லிம் பாடசாலைகள் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளர் இஸட்.தாஜுதீன் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் மீள்குடியேற்றப்பட்டு வருகின்ற முஸ்லிம் குடும்பங்களைச் சேர்ந்த மாணவர்களின் கல்வி அபிவிருத்தியை நோக்காகக் கொண்டே, அங்கு இயங்காமல் இருக்கின்ற முஸ்லிம் பாடசாலைகளை ஆரம்பிப்பதற்கான முன்னோடி நடவடிக்கைகளை தற்போது மேற்கொண்டு வருவதாகவும், சிதைவடைந்த நிலையிலுள்ள பாடசாலைகளைப் புனரமைக்கும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, புனரமைக்கப்பட்டுள்ள பாடசாலைகளை மீள் இயங்கச் செய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

# பரிசுப் போட்டியில் வெற்றி பெற்றவர்கள்

(கடந்த வாரத் தொடர்ச்சி.....)

**டீ மக்ஸ் (Tea Mugs) வெற்றியீட்டியோர்:**

01. கே.தியாகராஜா, சின்ன சூரியகந்த டிவிசன், சாமிமலை, ஹட்டன்.
02. சீ.நவநீத், 362/85B-, பல்லசேன வீதி, கட்டுவ, நீர்கொழும்பு.
03. எம்.எம்.மஸ்ஹர், சித்தவெல்கால, நிக்தழுபொத, குருணாகல்.
04. ஜே.ஜனுஷான், துங்ஹிந்த கம, ரிதிபான, பதுளை.
05. ஆர்.ஜெயலலிதா, 145/D பஹலகராகொட,எட்டியாந்தோட்டை.
06. மேகலா தவகுமார்,
262, ஆடியபாத வீதி, கல்வியங்காடு, யாழ்ப்பாணம்.
07. மு.றி.ஜுஸான், தாரிக் வீதி, மூதூர்-01.
08. எம்.ஏ.நஃபீஸ், 14/1, பேராறு, கந்தளாய், திருகோணமலை.
09. எம்.எச்.எப்.ஷில்பா, 67/2, ஹிஃஜ்ராபுர, தெல்தெனிய.
10. ஷுஹதா யூஸுப், 27, பெய்லி வீதி, நாவலப்பிட்டி.
11. குமாரவேல் சசிதரன்,
9 ஆம் வட்டாரம், உடுத்துறை வடக்கு, தாளையடி, யாழ்ப்பாணம்.
12. எம்.என்.எப்.றிஸ்னா, 3/1, கங்காஹரி வீதி, இல்லவத்துரை, கம்பளை.
13. என்.எம்.எப்.ஷியாதா, 98, அலுத்கம, மனான்வத்த, மாத்தளை.
14. அர்த்திகா அரீவ், 25B, கலேவத்த வீதி, கட்டுகஸ்தோட்டை.
15. எம்.ஏ.மொஹமட்,
20, வெள்ளவத்தை வீதி, வெல்லம்பிட்டிய, வெலிகம.
16. பி.ஆயிஷா ஹனா, 26, ஸண்டிஸ் வீதி, திக்குவல்லை.
17. ஷம்லா ஜிப்ரி, 11 1/5, வுல்ஃபென்டல் வீதி, கொழும்பு-13.
18. ஏ.ஏ.எம்.முஜாஹித், 247/8, பழைய தபால் நிலைய வீதி, சாய்ந்தமருது.
19. எச்.பாத்திமா ஹப்ஸா, பாண்டியங்குளம், நாச்சியாதீவு, அனுராதபுரம்.
20. எம்.ஆர்.எப். ருஹுஃமா, 240/A, மிடகங்கொட, ரக்குவான.
21. ச.ஜனனி, 67/16, குரைஷாணி மௌலானா ஒழுங்கை, கொழும்பு-09.
22. எம்.ஆர்.எம்.ரிம்னாஸ்,
252/3, பண்டாரநாயக்க மாவத்தை, கந்தப்பளை.
23. எஸ்.எல்.பாத்திமா பஸீஹா, 212/A, காசீம் வீதி, கல்முனைக்குடி-11.
24. கா.கிஷாந்தி, 48, கொத்மலை வீதி, தலவாக்கலை.
25. கினுஷா யோகேஸ்வரன்,
கோட்டையடி பருத்தியடைப்பு, ஊர்காவற்றுறை.
26. எஸ்.மோகனப்பிரியா, கலையகம், அராலி தெற்கு, வட்டுக்கோட்டை.
27. ஜா.நரேந்திரன், 303, நாவலர் வீதி, ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
28. எம்.எஸ்.எம்.சஃப்வான், B34/2, கொடேகொட, ஹெம்மாத்தகம.
29. எம்.எம்.பஸீல் அஹஃமட், 58/1, ஒருலியத்த, பொல்காவலை.
30. அனாஸ் ருஹாயா, 287, சலீமா மன்ஸீல்,சம் சம் வீதி, பொத்துவில்.
31. வீ.வினுஷன்,
சீ.சீ.ரீ.எம்.எஸ். ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
32. இஸட்.ஏ.ஆயிசா, 18, பள்ளி வீதி, ஹிங்குலோய, மாவனல்லை.
33. எம்.எப்.பாத்திமா ஃபஸீனா, 43, முல்லிபுரம், புத்தளம்.
34. எவ்.ரி.ரிஸ்லான்தீன், 40/A, மே வீதி, ஹம்பாந்தோட்டை.
35. பாத்திமா தீனா ஹுசைன், 13, கலதெனிய, மடிகே உடதலவின்ன.
36. வி.ஜெனிபர் மனீஷா, 56, உனம்புவ வீதி, கம்பளை.
37. ஹொ.அன்ரனீஸ்ஷஜீபன்,
25/3, மத்திய கிழக்கு வீதி, குருநகர் யாழ்ப்பாணம்.







(மிகுதி அடுத்த வாரம்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெப்பத்தை உடல் எவ்வாறு நிலைநிறுத்துகின்றது?



**மனிதன் இளஞ்சூட்டுக் குருதி உள்ள ஒரு ஜீவன் ஆவான். அதாவது, மனிதன் ஒரு சீர் வெப்பநிலை உயிரினத்தைச் சேர்ந்தவன். உலகிலுள்ள பாலூட்டிகள் அனைத்துமே இளஞ்சூட்டுக் குருதி உள்ள உயிரினங்களேயாகும்.அதனால், அனைத்துப் பருவ காலங்களிலும் மனிதனின் உடலின் வெப்பம் புறச்சூழ்நிலைக்கு ஏற்ப மாறாது ஒரே நிலையாக உள்ளது. மனிதனின் சாதாரண உடல் வெப்பநிலை 37°C அல்லது 98.4°F ஆகும். மனிதனின் உடல் நிலையானது வெப்பத்தை எவ்வாறு தக்க வைத்துக் கொள்கின்றது எனப் பார்ப்போம்.**

உண்ணும் உணவிலிருந்து நமது உடல் வெப்ப சக்தியைப் பெறுகின்றது. உணவு சமிபாடடைந்து பல மாற்றங்களைப் பெற்று வெப்பத்தைக் கொடுக்கின்றது. அத்தோடு, உணவு ஒட்சியேற்றல் அடைந்து, பல மாற்றங்களைப் பெற்று, வெப்பத்தைக் கொடுக்கின்றது. ஒட்சியேற்றல் என்பது ஒருவகையான எரிதல் செயற்பாடாகும். பொருட்கள் எரிவதால் வெப்பத்தைக் கொடுக்கின்றது.
இதேபோல், உணவுப் பொருட்கள் எரிக்கப்படுவதால் வெப்பம் வெளியேற்றப்படுகின்றது. ஆனால், பொருள் எரியும் போது வெப்பமும் ஒளியும் வெளியேற்றப்படுகின்றன.
இந்த வெப்பசக்தி உடலை வெப்பமாக வைத்திருக்கவும் உடலில் பல்வேறு உறுப்புகள் பல்வேறு செயல்களை உரிய முறையில் செய்யவும் உதவுகின்றது. அத்துடன், உடலில் ஒவ்வொரு நாளும் சுமார் 2,500 கலோரி வெப்ப சக்தி உண்டாக்கப்படுகின்றது.

நமது உடலின் வெப்பநிலையை மூளையிலுள்ள வெப்பத்தைக் கட்டுப்படுத்தும் மையம் (Temperature Center) நிலைப்படுத்துகிறது. இந்த மையம் முப்பெரும் பிரிவுகளைக் கொண்டுள்ளது. உடலின் வெப்பத்தைக் கட்டுப்படுத்தும் மையம் Control Center எனப்படுகிறது. இது குருதியின் வெப்பத்தை ஒழுங்குபடுத்துகிறது.மற்றொன்று வெப்பத்தை உயர்த்தும் மையம். இதனை Heating Center என அழைப்பர். இது குருதியில் வெப்பநிலை குறையும்போது குறிப்பிட்ட நிலைக்கு வெப்பத்தை உயர்த்தப் பயன்படுகின்றது. மூன்றாவது வெப்பத்தைக் குறைக்கும் மையம். இதனை Cooling Center என அழைப்பர். இது குருதியின் வெப்பநிலைக்கு மேலதிகமாக உள்ள வெப்பத்தைக் குறைக்கின்றது.





மூளையிலுள்ள வெப்பநிலை மையத்தில் ஏதாவது மாற்றம் ஏற்பட்டால், உடல் நடுக்கம் ஏற்படுகிறது. இதைத் தொடர்ந்து காய்ச்சல் (Fever) ஏற்படுகின்றது.

உடல் பொதுவாக, வெப்பத்தை தன்னைச் சூழ்ந்திருக்கும் சுற்றுப்புறப் பகுதிக்கு அனுப்புகின்றது. அந்தவகையில், நாம் நித்திரை கொள்ளும்போது, ஆசனமொன்றில் அமர்ந்திருக்கும்போது படுத்த அல்லது அமர்ந்த இடத்தைத் தொட்டுப் பார்த்தால் அப்பகுதி வெப்பமாக இருப்பதை அறியலாம். அதன்மூலம் உடலில் இருந்து வெப்பம் வெளியேற்றப்படுகிறது என்பது தெளிவாகின்றது. (அ)

# சுவையான சொக்லேற் பற்றிய வியப்பான தகவல்கள்



சீனி, கொக்கோ பௌடர், பால் என்பனவற்றைக் கலந்து தயாரிக்கப்படும் திண்ம வடிவிலான சுவையான இனிப்பு வகையாக சொக்லேற் (Chocolate) உள்ளது. 'எஸ்டெக்' இனத்தவர்களினால் பானமாக அருந்தப்பட்ட, கொக்கோ விதைகளால் தயாரிக்கப்பட்ட எக்ஸ்கோட்டல் (Xcotal) எனப்படும் பானமே சொக்லேற்றாக மாறியது. இந்தக் கொக்கோ விதைகள் கொண்ட காய்கள் உருவாகும் மரத்தின் விஞ்ஞானப் பெயர் Theobroma Colou என்பதாகும். அத்துடன், சொக்லேற்றுகளில் பால் சேர்ப்பது ஆங்கிலேயர்களின் கண்டுபிடிப்பாகும். இது கி.பி,1700 இல் ஆரம்பமானது. அந்தவகையில் இந்தச் சொக்லேற்றை உணவாக உட்கொள்ளும் பழக்கம் கி.பி.1800 இல் இங்கிலாந்தில் ஆரம்பமானது. அவர்கள் இதற்காக கொக்கோ, பசும்பால், மதுசாரம் மற்றும் சீனி என்பனவற்றைப் பயன்படுத்தினர்.

வருடாந்தம் ஐக்கிய இராச்சியத்தில் பாவிக்கப்படும் சொக்லேற்றுகளைத் தயாரிக்க கொக்கோ விதைகள் 200,000 தேவைப்படுகின்றன. ஜோசப் ஸ்டோர்ஸ் பிரை (Joseph Storrs Fry) மற்றும் John Cadbury என்பன ஆங்கிலேய சொக்லேற் உற்பத்தியின் முன்னோடி நிறுவனங்களாகும். 1870 இல் அவர்கள் Easter Eggs எனும் சொக்லேற்றை சந்தையில் அறிமுகப்படுத்தினர்.
1980 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் ஐரோப்பாவின் Vegolate எனும் சொக்லேற்றுடன் போட்டியிட வேண்டிய நிலை இங்கிலாந்துக்கு ஏற்பட்டது.
இதுவரை தயாரிக்கப்பட்ட சொக்கிலேற்றுகளில் மிகப் பெரிய சொக்லேற் 1992 இல் பெசிலோனா ஒலிம்பிக் போட்டிகளுக்காக தயாரிக்கப்பட்டது. அதன் நீளம் 34 அடி, அகலம் 16 அடி. நிறை 4,000 இறாத்தலாகும். நவீன விஞ்ஞானத்தின் துணையினால் 0.2 மி.மீ. முதல் 0.3 வரையான சுற்றளவு கொண்ட சொக்கலேற்றுகளைத் தயாரிக்க முடியும்.

1980 இல் சொக்லேற் தயாரித்தல் தொடர்பிலான இரகசியத்தை வெளிநாட்டவர்களுக்கு விற்க முயற்சித்த இளம் சுவிஸ் தம்பதியினரை அதிகாரிகள் கைது செய்தனர். அவர்கள் 40 க்கு அதிகமான Recipe களை ரஷ்யா மற்றும் சீன தூதரங்களுக்கு வழங்கியுள்ளனர் என்று தெரியவந்துள்ளது. (இ)











Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# கல்வி

## முகாமைத்துவம் - 38

### கற்றலுக்கான ஆலோசனைகள்

எம்.ஏ.எஃப். சப்ரானா

## கல்விசார் வழிகாட்டலின் அவசியம்

ஆலோசனை வழங்குதல் என்பது உதவி செய்கின்ற சொந்தம் எனலாம்.மனிதர்களைப் பொறுத்தவரையில் உளவியல் தேவைகள் பல்வேறுபட்டவை. பல்வேறுபட்ட ஆசைகள், எதிர்பார்ப்புகள் என்பன நம்மில் ஒவ்வொருவருக்கும் உள்ளன. இதனால், சிலவேளைகளில் உள்ளத்தில் பல சிக்கல்களும் தோன்றுகின்றன. இவ்விதமான சிக்கல்களை நீக்குவதற்கு ஆலோசனை கூறும் உளவியலாளர்களின் சேவை மிக அவசியமானதாகும். அவர்களே எமக்கு உதவும் உறவினராவர்.

**கல்விசார் வழிகாட்டல்கள் தேவைப்படும் சந்தர்ப்பங்கள் சில:**


1. கற்பதில் ஏற்படுகின்ற பிரச்சினைகள்.
2. தொழில் கல்வி பற்றி எதிர்காலத்தில் தோன்றும் பிரச்சினைகள்.
3. பாலியல் பிரச்சினைகளும் அதனைச் சார்ந்ததும்.
4. ஆரம்பப் பள்ளிகளில் வழிகாட்டல் முறைகள்.
5. இடைநிலைப் பள்ளிகளில் வழிகாட்டல் முறைகள்.
6. மனோநிலையும் மற்றும் ஆர்வமும்.
7. வாழ்க்கையின் குறிக்கோளுக்கான வழிகாட்டல் முறைகள்.

மேற்கூறப்பட்டுள்ள சந்தர்ப்பங்களில் முறையான வழிகாட்டுதல்கள் வழங்கப்படுகின்றபோது, உடலும் மனமும் நல்ல ஆரோக்கியத்துடன் இருக்கும் என்பதோடு, திறம்பட செயல்புரிவதற்கும் உதவியாக இருக்கும். அதிலும், இடைநிலைப் பருவத்தில் உள்ளவர்களுக்கு வழிகாட்டல் என்பது மிக அவசியமான ஒன்றாகவே கருதப்படுகின்றது. கல்வியில் பாடங்களை/ துறைகளை/ தொழில் வாய்ப்புக்களைத் தேர்ந்தெடுக்கும் போதும் இந்த வழிகாட்டல் முறையானது மிகவும் பயனுள்ளதாக அமைகின்றது.



மாணவப் பருவத்திலிருந்தே ஒவ்வொருவரும் சுய நம்பிக்கையுடனும் ஆர்வத்துடனும் தம் நிலைமைகளையும் இலட்சியங்களையும் உணர்ந்து கற்று வந்தால், கற்கும் கல்வி நிச்சயம் கைகொடுக்கும். அத்துடன், தேவையானபோது சிறந்த வழிகாட்டல்களை அணுகுவதானது உறுதியான வெற்றிக்கு வழிவகுக்கும் என்பதுடன் அவ்வழிகாட்டல்களின்படி நாம் செயற்படவும் வேண்டும்.

(தொடரும்)




# 2010, தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர்



க/மீரா மத்.கல்லூரி மாணவி எஃப்.ஹஸ்னா, 164 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர்,சித்தீக்-ஜெஸ்மி உம்மா தம்பதியரின் புதல்வியாவார்.



கே/குருனாகொட மு.வித்தியாலய மாணவன் சலா அஹமட், 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஹலீம்தீன்-சர்மிலா தம்பதியரின் புதல்வராவார்.



க/தெநு அஸ்-ஸிராஜ் ஆண்கள் வித்தியாலயத்தில் கல்வி பயிலும் ஏ.நஸீப், 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், நிஸார்-அஸீமா தம்பதியரின் புதல்வராவார்.



எஃப்.இல்மா, 157 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், க/தெநு/பாத்திமா பாலிகா மு.ம.வித்தியாலய மாணவியாவார்.



கிரீசன் சத்தியகுமார், 158 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், கமு/உவெஸ்லி உயர்தர பாடசாலை மாணவராவார்.



கே/பாபுல் ஹசன் மத்.கல்லூரி மாணவியான ஏ.தக்சகரி, 166 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஆனந்தராஜா-றஞ்சிதமலர் தம்பதியரின் புதல்வியாவார்.



யா/சண்டிலிப்பாய் இ.கல்லூரி மாணவி ர.அகிலா, 157 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



சி.பானுஜா, 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், யா/சண்டிலிப்பாய் இ.கல்லூரியில் கல்வி கற்கின்றார்.



க.சர்மினி, 154 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், யா/சண்டிலிப்பாய் இ.கல்லூரி மாணவியாவார்.



குருகுத்தல மு.ம.வித்தியாலய மாணவி சாபிரா பர்வின், 155 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், முனவ்பர்-சம்ஸுன் நிஷா தம்பதியரின் புதல்வியாவார்.



குருகுத்தல மு.ம.வித்தியாலய மாணவி எஃப்.அனீகா, 147 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர் அரூஸ் முஹம்மத்-நரூபா தம்பதியரின் புதல்வியாவார்.



ஹமூத் அஹமட், 144 புள்ளிகளைப் பெற்றுள்ளார். கமு/அல்-ஹம்றா வித்தியாலயத்தில் கல்வி கற்கும் இவர், அப்துல் ஜெலீல்-ஸாபினாஸ் தம்பதியரின் புதல்வராவார்.



காத்தான்குடி மீரா பாலிகா ம.வித்தியாலய மாணவி ஆஷத்ஹிபா, 156 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், ஆதம்லெப்பை-ஸாஜிதா தம்பதியரின் புதல்வியாவார்.



கே/சுலைமானியா மத்.கல்லூரியில் கல்வி கற்கும் பளீல் அஹமட், 147 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



எஃப். றிஜா, 152 புள்ளிகளைப் பெற்றுள்ளார். பூலாச்சேனை மு.வித்தியாலய மாணவியான இவர், றியாத்-றிஸானா தம்பதியரின் புதல்வியாவார்.



வத்தேகெதர மு.ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் எம்.ஸமீர், 157 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், வசீர்-மஹ்ரூசா தம்பதியரின் புதல்வராவார்.



மட்/அல்-அஸ்ஹர் வித்தியாலய மாணவி எஃப். ஸேபா, 163 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், மிஸ்பார்-ஆமினா தம்பதியரின் புதல்வியாவார்.



கும்பலங்கை ஹமீதியா ம.வித்தியாலயத்தில் கல்வி கற்கும் அன்பியா பானு, 148 புள்ளிகளைப் பெற்றுள்ளார்.



வத்தேகெதர அல்-ஸபா மு.ம.வித்தியாலய மாணவன் எம்.பிலால், 149 புள்ளிகளைப் பெற்றுள்ளார். இவர், அஸ்லம்-றிழானா தம்பதியரின் புதல்வராவார்.



*ஹட்டன், புனித கப்ரியேல் ம.கல்லூரியில் தமிழ் பிரிவிலிருந்து சித்தியடைந்த மாணவிகளான (இ.வ) என்.சஹ்றா (144 புள்ளிகள்), பூஜா பிரேமிகா (148 புள்ளிகள்), டில்ருக்ஷனாதேவி (164 புள்ளிகள்), பி.சல்மா (148 புள்ளிகள்), ஆர்.தனுஷிகா (145 புள்ளிகள்), ஜே.பஸ்னா (151 புள்ளிகள்), எஸ்.பிரகாஷினி (148 புள்ளிகள்), வி.விகாஷினி (149 புள்ளிகள்), எஸ்.யதுர்ஷினி (145 புள்ளிகள்), பி.சரண்யா (160 புள்ளிகள்), வி.தீக்ஷிதா (166 புள்ளிகள்) ஆகியோர் தமது அதிபர் திருமதி பி.சுந்தர்ராஜுடன் காணப்படுகின்றனர்.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



ட்ரோன விமானம்




# அமெரிக்காவில் 'ஏரி




**ஜுலியன் அசஞ்ஜே விக்கிலீக்ஸ் எனும் இணையத்தளத்தின் ஊடாக, அமெரிக்காவின் இராஜதந்திர இரகசியங்களை உலகுக்கு அம்பலப்படுத்தினார். நாளுக்கு நாள் புதிய புதிய இரகசியங்கள் இந்த இணையத்தளத்தின் மூலம் அம்பலமாகிக் கொண்டிருக்கின்றன. அமெரிக்காவின் இந்த இரகசியங்களில் வேற்றுக்கிரகவாசிகள் மற்றும் பறக்கும் தட்டுகள் தொடர்பான இரகசியங்களும் உள்ளடங்குகின்றன. இதனால், பறக்கும் தட்டுகள் மற்றும் வேற்றுக்கிரகவாசிகள் குறித்து மீண்டும் அனைவரும் ஆர்வம் செலுத்த ஆரம்பித்துள்ளனர். வேற்றுக்கிரகவாசிகள் மற்றும் அமெரிக்கா பற்றிக் குறிப்பிடும் போது 1974 இல் ரொஸ்வெல் எனும் இடத்தில் வேற்றுக் கிரகத்தைச் சேர்ந்தது என நம்பப்படும் விமானம் ஒன்று விபத்துக்குள்ளான சம்பவத்தை மறந்துவிட முடியாது. அவ்வாறே, 'நெவாடா' பாலைவனத்தின் மையப்பகுதியில் உள்ள மர்மப் பிரதேசமான 'ஏரியா 51' வலயத்தையும் மறந்துவிட முடியாது.**

வேற்றுக்கிரகவாசிகள் மற்றும் பறக்கும் தட்டுகள் பற்றி அறிந்துகொள்ள வேண்டுமாயின், அல்லது பறக்கும் தட்டுக்களைப் பார்க்க வேண்டுமாயின் அமெரிக்காவின் நெவாடா பிரதேசத்தில் உள்ள. 'நெவாடா' பாலைவனத்தின் மையப்பகுதியில் பரந்திருக்கும் 'எக்ஸ்ட்ராடெரஸ்ட்டிரியல் ஹைவே' என்று கூறப்படும் மனித சஞ்சாரமற்ற அதிவேகப் பாதையில் செல்ல வேண்டும். மேற்கூறிய 'எக்ஸ்ட்ராடெரஸ்ட்டிரியல்' என்ற சொல்லின் அர்த்தம் 'வேற்றுக்கிரக வாசிகள்' என்பதாகும்.

உலர் வலயப் பகுதியைச் சேர்ந்த 'நெவாடா' பாலைவனம், 'சகாரா' பாலைவனம் போன்று மணலால் சூழப்பட்ட பிரதேசம் அல்ல. இந்தப் பாலைவனப் பிரதேசம் மிகவும் உலர்ந்த வறண்டப் பகுதியாக இருப்பினும் மரஞ்செடிகள் தாவரப் பற்றைகள் என்பன உள்ளன. இந்த அதிவேகப்பாதை லாஸ்வேகாசில் இருந்து வடக்கே 100 மைல் தூரத்தில் அமைந்துள்ளது.

## எக்ஸ்ட்ராடெரஸ்ட்டிரியல் ஹைவே

இந்த நீண்ட அதிவேகப் பாதையில் பயணிக்கும்போது, உணவருந்தி பயணக் களைப்பைப் போக்குவதற்கு வசதியாக ரேச்சல் நகரத்தில் 'லிட்டில் ஏலியன் டைனர்' எனும் சிறிய உணவகம் ஒன்றுள்ளது. இந்த உணவகத்திற்கு அருகாமையில் இருக்கும் இப் பாரிய மனித சஞ்சாரமற்ற பிரதேசம் அமெரிக்க அரசுக்கு சொந்தமானது. 8,000 சதுர மைல் பரந்துள்ள இந்தப் பாரிய பாலைவனப் பகுதியின் மையத்திலேயே விமானப் படையின் இரகசியத் தலைமையகம் அமைந்துள்ளது. அமெரிக்க அரசின் உயர் அதிகாரிகளைத் தவிர இந்த இரகசிய தலைமையகத்தின் புதிர்கள் இன்றுவரை, புரியாதவையாகவே உள்ளது. இந்த வலயம் 'ஏரியா 51' என்று அழைக்கப்படுகின்றது. உத்தியோகபூர்வ பெயர் கூட வைக்கப்படாத அளவுக்கு இந்த தலைமையகம் மிக மிக இரகசியமானதாக உள்ளது.

## 'ஏரியா 51'

இந்தத் தொடர் பாலைவனப் பிரதேசத்தின் அழகை ரசிக்க வாய்ப்புக் கிடைத்தாலும், 'ஏரியா 51' என அழைக்கப்படும் வலயத்திற்குள் நம்மால் ஒரு அடி கூட எடுத்து வைக்க முடியாது. இந்த பிரதேசத்திலேயே மனிதர்களும் (குறிப்பாக அமெரிக்கர்கள்) வேற்றுக்கிரகவாசிகளும் தொடர்புகளைப் பேணிக்கொள்வதாக நம்பப்படுவதால் இப் பிரதேசம் அதி இரகசியப் பிரதேசமாகப் பேணப்படுகின்றது. 1974 இல் அமெரிக்காவின் நியூ மெக்சிக்கோ ரொஸ்வெல் பகுதியில் வீழ்ந்து விபத்துக்குள்ளாகியதாக நம்பப்படும் பறக்கும் தட்டு மற்றும் அதில் இருந்த வேற்றுக் கிரகவாசிகளின் சடலங்கள் எடுத்து வரப்பட்டு அவற்றைப் பயன்படுத்தி பரிசோதனைகள், ஆராய்ச்சிகள் என்பன இந்த இரகசிய இடத்தில் மேற்கொள்ளப்படுவதாகவும் நம்படுகின்றது.




உட் பிரவேசிக்கத் தடை என்று எச்சரிக்கைகள் பொருத்தப்பட்டுள்ளன

வெளிப்புறமாக எதுவுமே தெரியாத போதிலும், பலரும் இந்த 'ஏரியா 51' இல் தரையின் அடியில் விமானப்படை முகாம் ஒன்று விசாலமான அளவுக்கு அமைந்துள்ளதாகவே நம்புகின்றனர். தரையின் அடியில் அமைந்துள்ள பாரிய கட்டிடத் தொகுதியிலேயே இந்தப் பரிசோதனைகள் யாவும் மேற்கொள்ளப்படுவதாகவும் ஒரு கருத்துண்டு. நாசா, நிறுவன விஞ்ஞானிகள் மற்றும் அமெரிக்க இராணுவத்தினர் இணைந்து இந்த ஆய்வுகளையும் பரிசோதனைகளையும் மேற்கொள்வதாகவும் கூறப்படுகின்றது. பறக்கும் தட்டுகளின் தொழில்நுட்பத்தை விளங்கிக் கொண்டு அத்தொழில்நுட்பத்தைப் பெற்றுக் கொள்ளவே பொறியியலாளர்கள் இங்கு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக நம்பப்படுகின்றது. 'ஏரியா 51' பிரதேசத்தில் இருப்பதாகக் கூறப்படும் 'செபியர்' விமான ஓடுதளம் பறக்கும் தட்டுக்கள் தரையிறங்கவே பயன்படுத்தப்படுவதாகவும். இந்த ஓடுதளத்தின் மீது தண்ணீர் இட்டால் மட்டுமே அது தென்படும் என்றும் கூறப்படுகின்றது. ஏனைய வேளைகளில் இந்த ஓடுதளம் மறைந்திருப்பதாகவும் ஒரு கருத்துண்டு. அப்பலோ நடவடிக்கையின் கீழ் மேற்கொள்ளப்பட்ட சந்திரனுக்கான பயணம் வெறும் பொய் என்றும் சிலர் குறிப்பிடுகின்றனர். நாசா நிறுவனம் இந்தப் பொய்யை அரங்கேற்றியதும் இந்த பாலைவனப் பிரதேசத்திலேயே என்றும் சிலர் கருதுகின்றனர். இந்தப் பிரதேசம் சந்திரனின் மேற்பகுதியை ஒத்ததாகவே காணப்படுகின்றது. எனினும், இவ்வகையான கூற்றுக்கள் உறுதியற்ற கூற்றுக்களாக இருக்கின்றதே தவிர, உரிய வகையில் நிரூபிக்கப்படவில்லை.



பாதுகாப்புக் கெமராக்கள் பொருத்தப்பட்டுள்ளன

## மறைந்துள்ள இரகசியம்

உலகில் மிகவும் பிரபலமடைந்த 'எக்ஸ் பைல்ஸ்' தொலைக்காட்சித் தொடரும், 1996 இல் வசூலில் சாதனை படைத்த 'இண்டிபெண்டன்ஸ் டே' திரைப்படமும், ஏரியா 51 பிரதேசம் வேற்றுக்கிரக வாசிகளுடன் தொடர்புபட்டுள்ளது என்பதனை ஏற்றுக் கொள்பவர்களுக்கு பெரும் ஆர்வத்தை ஏற்படுத்தியது. வோல்ட்டர் கான் என்பவர் இவ்வாறான ஆர்வலர்களில் ஒருவர். இவர் இந்த ஏரியா 51 பிரதேசத்தை 'வேற்றுக்கிரகவாசிகளின் தரிப்பிடம்' என்றும் குறிப்பிடுகின்றார். வேற்றுக் கிரகவாசிகள் குறித்து அதீத ஆர்வம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



பிளக் போட் விமானம்

# ...ன் இரகசியங்கள் மறைந்துள்ள ...யா 51?




கொண்டவர்கள் பலர் 'ஏரியா 51' பிரதேசத்திற்குள் திருட்டுத்தனமாக பிரவேசிக்க எத்தனையோ தடவைகள் முயற்சித்துள்ளனர். எனினும், அவை அனைத்தும் தோல்வியிலேயே முடிவுற்றன. காரணம் இது பற்றிய இரகசியத்தை அதிகபட்சம் பேணிக் கொள்ள அமெரிக்க அரசாங்கம் சகல


வேற்றுக்கிரகவாசியினுடையது எனக் நம்பப்படும் சடலம்


அமெரிக்க உளவு விமானங்களைப் பரிசோதித்தல்

முயற்சிகளையும் எடுத்துள்ளமையே காரணமாகும். அங்கு நடைபெறும் சம்பவங்கள் மற்றும் விடயங்கள் குறித்தான தகவல்கள் எதுவும் வெளிவராத வகையில். 'ஏரியா 51' பிரதேசத்தைச் சூழ மிகவும் கடுமையான பாதுகாப்பு நிலவுகின்றது. கண்காணிப்புக் கமராக்கள் சகல இடங்களிலும் பொருத்தப் பட்டுள்ளன. அதேபோன்று, 'உட்பிரவேசிக்கத் தடை' 'புகைப்படம் எடுக்கத் தடை' ஆகிய எச்சரிக்கை அறிவிப்புகள், சமிக்ஞைகள் சகல இடங்களிலும் பொருத்தப்பட்டுள்ளன. இந்த எச்சரிக்கை அறிவிப்புகளைப் பொருட்படுத்தாது உட்பிரவேசிப்பவர்கள் விசேட பாதுகாப்புப் படையினரால் தடுத்து நிறுத்தப்படுவர். 24 மணி நேரமும் விசேட பாதுகாப்புப் படையினர் விழிப்பாக இருந்து இந்தப் பிரதேசத்தைப் பாதுகாத்து வருகின்றனர். பிரபல சஞ்சிகையான 'டைம்' இது பற்றிய விபரத்தைக் கேட்டபொழுது; ''இது பற்றி எதுவும் பேச நாம் தயாரில்லை'' என்று அரசாங்கப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.



ஏரியா 51 இன் செய்மதிப் புகைப்படம்


வேற்றுக்கிரகவாசிகள் அல்லது பறக்கும் தட்டுகள் பற்றிய வாத, விவாதங்கள் பலவாறாக இருப்பினும், 'ஏரியா 51' பிரதேசத்தில் ஏதோ புரியாத பல மர்மங்கள் உள்ளன என்பது மட்டும் உண்மை.

## விமானப் படையின் பரிசோதனை முயற்சிகள்

எது எவ்வாறாயினும், அமெரிக்க விமானப் படை தனது அதி நவீன விமானங்களை இப்பிரதேசத்திலேயே பரிசோதித்துப் பார்க்கின்றது. இந்த நடவடிக்கைகளும் இரகசியமாகவே நடைபெறுகின்றன. அமெரிக்க அரசுக்கு சொந்தமான இந்தப் பகுதியில் இரண்டாம் உலகப் போரின்போதும் குண்டுகள் பரிசோதித்துப் பார்க்கப்பட்டன. 'அணுகுண்டு எரிசக்தி ஆணைக்குழுவின்' கீழ் இந்தக் குண்டு பரிசோதித்துப் பார்க்கப்பட்டது. 1955 இல் அமெரிக்காவின் மத்திய உளவுப் பிரிவு அதாவது, சி.ஐ.ஏ.அமைப்பு அங்கு விமான ஓடு தளம் ஒன்றினை அமைத்தது. விமானங்களைப் பரிசோதித்துப் பார்க்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டது. வான்பரப்பில் உளவு பார்க்கும் 'யு 2' உளவு விமானத்தின் பரிசோதனை நிகழ்வு இங்கேயே இடம்பெற்றது. அதன்பின் அமெரிக்காவின் யுத்தச் செயற்பாடுகளுடன் தொடர்புடைய கொந்தராத்துக் காரரான 'லொக்ஹீட்' நிறுவனம் அவர்களின் பரிசோதனை செயற்பாடுகளுக்காக இத் தளத்தைப் பயன்படுத்திக் கொண்டது. 'யு 2' விமானத்தின் வெற்றியின் அடிப்படையில் 'எஸ் ஆர் 71 பிளக்பேட்' விமானம் தயாரிக்கப்பட்டது. 1960 மற்றும் 70 ஆம் ஆண்டுகளில் 1,000 பேரளவில் இந்த இரகசிய ஆய்வுதளத்தில் பணியாற்றினர். பொறியியலாளர்கள் இந்த இடத்தை 'ட்ரீம்லேண்ட்' (கனவு உலகம்) 'பெரடைஸ் லேண்ட்' (சுவர்க்கம்) மற்றும் 'குரூம் லேக்' என்று பலவாறு குறிப்பிடுகின்றனர். இந்த இடத்தில் வற்றிப்போன ஏரியின் அடையாளம் இருப்பதனாலேயே 'குரூம் லேக்' என்று அழைக்கப்படுகின்றது. 1977 இல் எதிரிகளின் ரேடார் கருவிகளிடமிருந்து தப்பிச் செல்லக்கூடிய முதலாவது விமானமான லொக் ஹீட் எஃவ் 117 ஏ நைட்ஹோக்' விமானமும் இத் தளத்தில் இருந்தே உருவாக்கப்பட்டது. இந்த விமானத்தை 1988 வரை இரகசியமாக வைத்திருக்க அமெரிக்க அரசு நடவடிக்கைகளை எடுத்திருந்தது.

## பறக்கும் தட்டு

இந்த இரகசிய விமானப் பரிசோதனைகள் இடம்பெற்ற காலப்பகுதியிலேயே இப்பகுதியில் வேற்றுக்கிரகவாசிகளின் பறக்கும் தட்டுக்களை பலர் பார்த்ததாகக் கூறுகின்றனர்.



வேற்றுக்கிரக வாசிகள் ஏரியா 51 மற்றும் அமெரிக்க அரச இரகசியங்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட எக்ஸ் பைல்ஸ் தொலைக்காட்சித் தொடர்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# மொரீஷியஸ்

**அரசு:** நாடாளுமன்றத்துடன்கூடிய குடியரசு.

**சுதந்திரம்:** ஐக்கிய ராச்சியத்திடமிருந்து 12 மார்ச் 1968; குடியரசானது 12 மார்ச் 1992.

**தேசிய பெயர்:** ரிபப்ளிக் டி மொரிஸ் (மொரீஷியஸ் குடியரசு -Republic of Mauritius).

**தேசிய விடுமுறை தினம்:** சுதந்திர தினம், மார்ச் 12.

**ஜனாதிபதி** (2003):அன்ரூத் ஜெகநாத்.

**பிரதமர்** (2005): நவீன் ராம்குலாம்.

## புவியியல்

மொரீஷியஸ் நாடானது இந்து சமுத்திரத்தில் அமைந்துள்ள மலைகள் நிறைந்த ஒரு தீவுக் கூட்டமாகும். டியூனியன் தீவிற்கு அண்மையில் அமைந்துள்ள இத்தீவுத் தொகுதியானது அகாலெகா, ரொட்ரீகஸ், பிரான்டன் ஆகிய முக்கிய தீவுகளை உள்ளடக்கி மேலும் பல சிறிய தீவுகளையும் கொண்டுள்ளது. 8 முதல் 10 மில்லியன் வருடங்களுக்கு முன்னர் உருவாகிய எரிமலைகள் மொரீஷியஸ் நாட்டின் தரைத்தோற்றத்தில் இன்றும் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இன்றளவில் அவை உறங்கும் எரிமலைகளாக அமைதிகாக்கின்றன. தென்கிழக்கில் பாயும் கிரேண்ட் ரிவரும் வடமேற்கில் பாயும் கிரேண்ட் ரிவரும் நாட்டின் முக்கிய நதிகளாகும்.

**மொத்தப்பரப்பு:** 788 ச. மைல் (2,040 ச.கி.மீற்றர்).

**மொத்த நிலப்பரப்பு:** 714 ச.மைல் (1,849 ச.கி.மீற்றர்).

**தலைநகரமும் பெரிய நகரமும்:** போர்ட் லூயிஸ்.

**உயர்மலைச் சிகரம்:** ப்ளெக் ரிவர் (828 மீ)

**தாழ்மையம்:** இந்து சமுத்திரம்.

**சனத்தொகை** (2009): 1,284,264.

**தேசிய கீதம்**

Glory to thee,
Motherland, oh motherland of mine,
Sweet is thy beauty,
Sweet is thy fragrance,…. என ஆரம்பிக்கின்றது.

**நாணயம்:** மொரீஷிய ரூபாய்.

**மொழிகள்:** ஆங்கிலம் 1% லும் குறைவு (உத்தியோகபூர்வ மொழி) கிரியோல் 81%, போஜ்பூரி 12%, பிரெஞ்ச் 3%.

**இனக்குழுவினர்கள்:** இந்தோ மொரீஷியன் 68%, கிரியோல் 27%, சினோ-மொரீஷியன் 3%, பிரேன்கோ-மொரீஷியன் 2%.

**சமயங்கள்:** இந்துக்கள் 48%, ரோமன் கத்தோலிக்கம் 24%, ஏனைய கிறிஸ்தவம் 8%, இஸ்லாம் 17%.

**எழுத்தறிவு** (2003): 86%.

**இணையத்தளக் குறியீடு:** MU

**தொலைபேசிக் குறியீட்டு இலக்கம்:** 230.

## வரலாறு

ஒல்லாந்தரின் ஆட்சியின் பின்னர் 1715 இல் பிரெஞ்ச் குடியேற்றவாசிகள் இத்தீவை தமது ஆதிக்கத்திற்குட்படுத்தி இத்தீவுக் கூட்டத்திற்கு 'இலே டி பிரான்ஸ்' எனப் பெயர் வைத்தனர். இங்கு டொன்னைஸ் என்பவரின் தலைமையில் சிறந்த உட்கட்டமைப்பு வசதிகள் ஏற்படுத்தப்பட்டன. சீனி உற்பத்தியை முன்னேற்றும் பொருட்டு கரும்புப் பயிர்ச் செய்கையில் ஈடுபடுவதற்காக, கறுப்பின ஆபிரிக்க அடிமைகள் இங்கு கொண்டுவரப்பட்டனர். 1810ஆம் ஆண்டு பிரித்தானியா இத்தீவினைக் கைப்பற்றி, 1814 இல் தமது நிருவாகத்தை ஆரம்பித்தது.அதன் பின் இந்தியாவிலிருந்து இந்திய குடிகள் பெருமளவில் இங்கு குடியேற்றப்பட்டன. 1835 இல் இந்தியர்களின் பெருந்தொகையான குடியேற்றத்தால் மொரீஷியஸ் சமூகத்தில் முழுமையான மாற்றம் ஏற்பட்டு நாட்டின் சனத்தொகையில் இந்தியர்கள் பெரும்பான்மையாயினர். 1968 மார்ச் மாதம் 12 ஆம் திகதி நாடு பிரித்தானியரிடம் இருந்து சுதந்திரமடைந்தது. அதன் பின், இந்திய வம்சாவளியினர் தலைமையேற்கும் ஓர் ஆபிரிக்க நாடாகத் திகழ்கின்றது.



## கலாசாரம்

பல்வேறு கலாசாரங்களின் வரலாற்று ரீதியான தாக்கங்களை உள்வாங்கி உருவானதே மொரீஷியஸ் கலாசாரமாகும். உள்ளூர் கலாசாரமும் குடியேறிய மக்களின் கலாசாரமும் இங்கு நன்கு பிரதிபலிக்கின்றன. மொரீஷியஸ் சமையல் கலையில் இந்திய, கிரியோல், சீன மற்றும் ஐரோப்பிய சமையல் கலைகளின் செல்வாக்கைக் காணலாம். மொரீஷியஸின் இசையானது 'செகா' இசை என அழைக்கப்படுகின்றது.

## காலநிலை

நிலையற்ற மாறும் தன்மைகொண்ட வெப்ப சுவாத்தியத்தை உடைய நாடாகத் திகழும் மொரீஷியஸ், ஓர் இடைவெப்ப காலநிலையைக் கொண்ட நாடாகும். இங்கு இரு பருவ காலங்களைக் காணலாம். கோடையானது நொவெம்பர் முதல் ஏப்ரல் மாதம் வரையும் மாரிகாலமானது மே முதல் செப்டெம்பர் மாதம் வரையும் நிலவும்.

## தொடர்பாடல்

**தொலைபேசிகள்** (2006): பிரதான தொலைபேசிப் பாவனையாளர்கள்: 357,300; செல்லிடத் தொலைபேசிகள்: 772,400. **வானொலி ஒலிபரப்பு நிலையங்கள்** (2002): AM4, FM 9. **தொலைக்காட்சி ஒளிபரப்பு நிலையங்கள்** (1997):2, **இணையத்தள வழங்குனர்கள்** (2007): 9,792; **இணையத்தளப் பாவனையாளர்கள்:** 182,000.

## போக்குவரத்து

**பெருந்தெருக்கள்** (2005): மொத்தம் 2,020 கி.மீற்றர் (செப்பனிடப்பட்டவை 2,020 கி.மீ; 75 கி.மீற்றர் நீளமான அதிவேகப் பாதைகளும் இதில் உள்ளடங்கும்). **துறையும் துறைமுகமும்:** போர்ட் லூயிஸ். **விமான நிலையங்கள்** (2007):5.

## பொருளாதாரம்

**விவசாயம்** (பயிர்ச்செய்கை நிலம் 49%) **மற்றும் விலங்கு வேளாண்மை**, கரும்பு, தேயிலை, கிழங்குவகைகள், வாழைப்பழம், தானியங்கள், பாற்பண்ணைப்பொருட்கள், ஆடுகள், மீன், **முக்கிய கைத்தொழில்கள்:** உணவு உற்பத்திப் பொருட்கள், புடவை, உலோக உற்பத்திகள், உல்லாசப் பயணத்துறை.


**இயற்கை வளங்கள்:** பயிர்ச்செய்கை நிலம், மீன்வளம். **ஏற்றுமதிகள்** (2007): புடவை, சீனி. **இறக்குமதிகள்** (2007): மூலப் பொருட்கள், பெற்றோலிய உற்பத்தி, ரசாயனப் பொருட்கள். **முக்கிய வர்த்தகப் பங்காளிகள்** (2006): ஐக்கிய ராச்சியம், ஐக்கிய அரபு எமிரேட்ஸ்,ஐக்கிய அமெரிக்கா, மடகஸ்கார், தென் ஆபிரிக்கா, சீனா, இந்தியா.

## பிரசித்தி பெற்ற இடங்கள் சில....

- பெம்ப்ல்மொன்சஸ் தாவரவியல் பூங்கா
- Île aux Cerfs தீவு
- La Vanille முதலைகள் காட்சிசாலை
- ப்ளெக் ரிவர் ஜோர்ஜ் தேசிய வனவிலங்கியல் பூங்கா
- க்ரேண்ட் பேசின் ஏரி
- யுரோகா க்ரியோல் வீடு
- கெமரல் நீர்வீழ்ச்சி.


கெமரல் நீர்வீழ்ச்சி


க்ரேண்ட் பேசின் ஏரியும் அதனை அண்டிய கோயில் வளாகமும்


தலைநகரின் ஒரு பகுதி


பிரதமர்


தேசிய இலச்சினை








Île aux Cerfs தீவு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## வினாத்தாள் - 11

பெயர்: ............................................. நேரம்: 1மணி 15நிமிடங்கள்

01. பின்வரும் பந்தியை வாசிக்க.

> வெயில் தணிந்தது. வானம் மப்பும் மந்தாரமுமாய் இருந்தது. திடீரென மரங்கள் அசைந்து ஆடின. சாதாரணமாக வீசிய காற்று பலமாக வீசத் தொடங்கியது.தூசுகள் கடதாசிகள் எல்லாம் மேலே பறந்தன. மரங்கள் சரிந்து சரிந்து ஆடி இயலாமல் முறிந்தன. கூரைத் தகடுகள் காற்றில் பறந்தன. மழையும் பெய்யத் தொடங்கியது. ''ஓ ஓ'' என்ற சத்தத்துடன் காற்று, புயலாக மாறியது.

★ ***கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தேர்ந்தெடுத்து புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.***

(i) இப்பந்தியில் எக்காட்சி பற்றிக் கூறப்பட்டுள்ளது?.......................
(ii) ஆகாயம் என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக.......................
(iii) காற்று எவ்வாறு புயலாய் மாறியது?.......................
(iv) 'மரம் அசைந்து ஆடியது' என்னும் வாக்கியத்தை பன்மையாக மாற்றுக.
.......................
(v) 'வீட்டுக்கூரை' என்பதைப் பிரித்து எழுதுக.......................
(vi) 'கூரைத்தகடுகள் காற்றில் பறந்தன' என்னும் வாக்கியத்தை நிகழ்காலத்தில் மாற்றி எழுதுக.......................

02. அடைப்புக்குள் இருக்கும் சொற்களிலிருந்து பொருத்தமான சொற்களைத் தெரிவு செய்து வெற்றிடத்தை நிரப்புக.

(i) இன்று வைத்திய....................... நடைபெறும்.
(பறிசோதணை/பரிசோதனை/பரிசோதணை)
(ii) ஐந்தாம் திகதி.......................வழங்கப்படும்.
(சீருடைத் துணிகள்/சீருடைத்துனிகள்/ சீறுடைத்துணிகள்)

03. பொருத்தமான நிறுத்தல் குறிகளை இடுக.

(i) பெரியவரே உங்களுக்கு என்ன வேண்டும்
(ii) கடற்கரையில் சிறிய கற்கள், ஊரிகள், சிப்பிகள் ஆகியவற்றைச் சேகரித்தேன்

04. தரப்பட்டுள்ள வாக்கியத்தில் உள்ள எழுவாய், பயனிலை, அடைமொழிகள் என்பனவற்றை இனங்கண்டு எழுதுக.

| நீலமயில் அழகிய தோகை விரித்து ஆடியது. |
|---|

(i) எழுவாய்.......................
(ii) பயனிலை.......................
(iii) எழுவாய் அடைமொழி.......................
(iv) செயப்படுபொருள் அடைமொழி.......................

05. சொற்களை ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியத்தை எழுதுக.

* நிகழ்ச்சிகளை/வேண்டும்/மட்டுமே/பயனுள்ள/பார்க்க/நமக்குப்/தொலைக்காட்சியில்

.......................

06. பின்வரும் பழமொழிகளின் கருத்தை எழுதுக.

(i) இளமையிற் கல்வி சிலையிலெழுத்து.
.......................
(ii) அகத்தின் அழகு முகத்தில் தெரியும்.
.......................

07. ஒவ்வொரு தமிழ்ச் சொல்லுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கிலத்தில் எழுதுக.

(i) கரும்பலகை.......................
(ii) வகுப்பறை.......................
(iii) தபாற்கந்தோர்.......................

08. கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) Happy new year .......................
(ii) Silence Please .......................
(iii) I am reading book .......................

09. பின்வரும் ஒவ்வொரு சிங்கள வாக்கியத்தினதும் கருத்தைத் தமிழில் எழுதுக.
(i) ம(ட்)ட வ(த்)துர டிகக் (Dh)தென்ன
.......................
(ii) தும்ரிய ஸ்தானய(ட்)ட யன்னே கொஹொமத(Dh)த?
.......................

★ ***10 தொடக்கம் 36 வரையுள்ள வினாக்களுக்கு நான்கு விடைகள் தரப்பட்டுள்ளன. சரியான விடையைத் தெரிவு செய்து அதன்கீழ் கோடிடுக.***

10. சித்திரைப் புத்தாண்டுக் காலத்தில் பூக்கும் தாவரம் எது?
(i) இலுப்பை (ii) வேம்பு (iii) வாகை (iv) மா

11. பூக்களில் தேன் பருக வரும் பிராணி எது?
(i) மயிர்கொட்டி (ii) கிளி (iii) தேனீ (iv) நத்தை

12. தாவரங்களின் வேர்கள், தண்டுகளை அரிக்கும் பிராணி எது?
(i) செவ்வெறும்பு (ii) தேவாங்கு (iii) கரையான் (iv) ஆமை

13. இரவு வேளைகளில் இலைகள் சுருங்கும் தாவரம் எது?
(i) வாகை (ii) துளசி (iii) தூதுவளை (iv) இராவணன்மீசை

14. மூலிகையாக நாய் விரும்பி உண்ணும் தாவரம் எது?
(i) குப்பைமேனி (ii) தேங்காய்ப்பூக்கீரை (iii)வாழை (iv) பால் அறுகு

15. தரப்பட்டுள்ள மரங்களில் ஆணிவேருள்ள மரம் எது?
(i) பனை (ii) கமுகு (iii) தென்னை (iv) இலுப்பை

16. பலா இலையின் வடிவத்தை ஒத்த இலை எது?
(i) அகத்தி (ii)மரமுந்திரிகை (iii) ஈரப்பலா (iv) கொவ்வை

17. தேனைக் கொண்டிராத பூ எது?
(i) வாழைப்பூ (ii) மாம்பூ (iii) கடதாசிப்பூ (iv) பாலைப்பூ

18. ஆண்பூவும் பெண்பூவும் தனித்தனியாக காணப்படும் தாவரம் எது?
(i) தென்னை (ii) பப்பாசி (iii) இலுப்பை (iv) கொய்யா

19. அடி மரத்திலும் வேரிலும் காய்க்கும் மரம் எது?
(i) நெல்லி (ii) பலா (iii) இலுப்பை (iv) பப்பாசி

20. ஆறு இதழ்களைக்கொண்ட பூ எது?
(i) பவளமல்லிகை (ii) அலரிப்பூ (iii) கடதாசிப்பூ (iv) கரணைப்பூ

21. ஐந்து இதழ்களைக்கொண்ட பூ எது?
(i) திருவாத்திப்பூ (ii) எக்சோரா (iii) செவ்வரத்தைப்பூ (iv) கமுகு

22. கொள்ளை நோயைப் பரப்பும் பிராணி எது?
(i) நுளம்பு (ii) ஈ (iii) எலி (iv) குரங்கு

23. இலங்கைக்கு மட்டுமே உரித்தான பறவை எது?
(i) மயில் (ii) கிளி (iii) கொக்கு (iv) காட்டுச் சேவல்

24. குட்டியை தூக்கிச் செல்ல நாய் கொளவுவது குட்டியின் எப்பகுதியில்?
(i) கால்களை (ii) வயிற்றுப் பகுதியை
(iii) கழுத்துப்பகுதியை (iv) காதுகளை

25. அணில் மரத்துக்கு மரம் தாவும்போது, அதன் உடலின் சமநிலையைப் பேணுவது எது?
(i) உடல் நிறை (ii) மீசை (iii) வால் (iv) கால்கள்

26. தோலினால் சுவாசிக்கும் பிராணி எது?
(i) மீன் (ii) மண்புழு (iii) பன்றி (iv) சீல்

27. கூடு கட்டத் தெரியாத பறவை எது?
(i) காகம் (ii) கொக்கு (iii) பருந்து (iv) குயில்

28. கால்கள் இல்லாத பிராணி எது?
(i) தேள் (ii) மர அட்டை (iii) நத்தை (iv) பூராண்

29. எட்டுக் கால்கள்கொண்ட பிராணி எது?
(i) எறும்பு (ii) அட்டை (iii) பூனை (iv) சிலந்தி

30. இரை மீட்கும் பிராணி எது?
(i) ஆடு (ii) நாய் (iii) ஈ (iv) பன்றி

31. ஆமை முட்டையின் நிறம் என்ன?
(i) கறுப்பு (ii) மஞ்சள் (iii) வெள்ளை (iv) கபிலம்

32. கடவுச் சீட்டு வழங்கும் திணைக்களம் எது?
(i) பிரதேச செயலகம் (ii) ஆட்பதிவுத் திணைக்களம்
(iii) குடிவரவு குடியகல்வுத் திணைக்களம் (iv) சுங்கத் திணைக்களம்

மிகுதி அடுத்த இதழில் வெளிவரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புத்தாண்டில் புதிய முயற்சிகளை ஆரம்பிப்போம்

எமது வாழ்க்கைக்கு புதிய அனுபவங்களை இணைத்துவிட்டுப் பழைய ஆண்டு கழிந்து, புதிய ஆண்டு ஆரம்பமாகியுள்ளது. இதற்கமைய, கடந்த காலத்தில் இழக்கப்பட்ட விடயங்கள், குறைபாடுகள், தவறுகள் குறித்து சிந்தித்து செயலாற்ற புதிய ஆண்டில் திடசங்கற்பம் கொள்வோம். அந்தவகையில், தவறுகள் அனைத்தையும் திருத்திக்கொண்டு புத்தாண்டினை சிறப்பாக எதிர்கொள்ள ஒவ்வொருவரும் முயற்சிக்க வேண்டும்






கடந்த ஆண்டின் முன்னேற்ற அறிக்கையை ஒப்பிட்டுப் பாருங்கள்

## குறைந்த புள்ளிகள் பெற்ற பாடங்களில் கவனம் செலுத்துங்கள்

நீங்கள் கடந்த ஆண்டு எந்தெந்தப் பாடங்களில் குறைந்த புள்ளிகளைப் பெற்றிருக்கிறீர்கள் என்பதை ஆராய்ந்து, அந்தப் பாடங்களில் அதிக கவனம் செலுத்துங்கள்.

## தவறுகளுக்கு ஆளாவதைத் தவிர்த்து பாராட்டைப் பெற முயற்சியுங்கள்

கடந்த ஆண்டில் பெற்றோர்கள், ஆசிரியர்கள் மற்றும் வயதில் மூத்தவர்கள் உங்களை ஏதோ ஒரு காரணத்திற்காக குறை கூறியிருப்பார்கள்.ஏன் இவ்வாறான சந்தர்ப்பங்களை நீங்கள் எதிர்நோக்க நேர்ந்தது? என்பது குறித்து இந்தப் புத்தாண்டில் சிந்தித்துப் பார்ப்பது அவசியமாகும். உங்கள் தவறான செயற்பாடுகளினாலேயே இவ்வாறு குறைகளைக் கேட்க நேர்ந்திருக்கலாம்.

எனவே, புத்தாண்டில் அத்தகைய தவறான செயற்பாடுகளைக் கைவிட்டு நல்ல குணங்களை வளர்த்துக்கொள்ள அயராது முயற்சி செய்யுங்கள். உதாரணமாக; சில மாணவர்கள் பாடசாலையில் வழங்கப்படும் வீட்டுவேலைகளை உரிய காலத்தில் செய்யத் தவறுகின்றனர். இதனால், ஆசிரியர்கள் வழங்கும் தண்டனைகளை எதிர்கொள்ளவேண்டி ஏற்படுகின்றது. பாடசாலைகளில் வீட்டுவேலைகள் வழங்கப்படுவதன் முக்கிய நோக்கம் உரிய பாடங்கள் தொடர்பான அறிவினை மேலும் விருத்தி செய்வதற்காகும். எனவே, இந்த விடயத்தில் மாணவர்கள் உரிய கவனம் செலுத்துவது மிக மிக அவ்சியமானதாகும்.

நம்மில் ஒவ்வொருவரும் பிறரின் பாராட்டுகளைப் பெறுவதிலேயே அதிக விருப்பம் கொண்டவர்களாக இருக்கின்றனர். அதற்கான சிறந்த வழி, கடந்த ஆண்டில் செய்த தவறுகளைக் கைவிட்டு நல்வழி நடந்து நற்செயல்களில் ஈடுபடுவதேயாகும்.



குறை கேட்க நேர்ந்த விடயங்களை ஆராயுங்கள்

## நண்பர்கள் கோபித்துக் கொண்டது ஏன்?

கடந்த ஆண்டில் சில நண்பர்கள் உங்களுடன் கோபித்துக் கொண்டிருக்கக் கூடும். இதற்குக் காரணம் என்ன? என்பதனை சற்று சிந்தித்துப் பாருங்கள். உங்கள் தவறுதான் அதற்கு காரணமெனின்; அத்தவறுக்காகத் தயங்காது அவர்களிடம் மன்னிப்புக் கோருங்கள்.

மாறாக, நண்பர்கள்தான் தவறுகளைச் செய்தவர்களாயின் அத்தவறினால் ஏற்பட்ட பாதிப்புகளை அவர்களுக்கு உணர்த்தி அவர்களை மன்னித்து விடுங்கள். இச்செயற்பாடானது மிக நல்ல பண்பு என்பதுடன், மிகச் சிறந்த ஆளுமையுமாகும்.

## ஆரோக்கியம்

சுறுசுறுப்பான, ஆரோக்கியமான வாழ்க்கையை வாழ உடல் ஆரோக்கியம் குறித்து அதிக அக்கறை செலுத்துவது அவசியமாகும். அடிக்கடி நோய்வாய்ப்படுதல் கல்விச் செயற்பாடுகளைப் பாதிக்கும். மோசமான பழக்கங்கள், தவறான உணவுப் பழக்க வழக்கங்கள் என்பன நோய்கள் ஏற்பட வழிவகுக்கின்றன. எனவே, இவ்வாண்டில் உடற் சுகாதாரத்தில் அதிக அக்கறை செலுத்துங்கள்.உடல் ஆரோக்கியத்தில் உளநிலையும் (மனநிலையும்) அதிக தாக்கம் செலுத்துவதால், எப்போதும் சிறந்த மனநிலையைப் பேண முயற்சியுங்கள். வீண் கோபம், தீய பழக்கங்கள், பிரச்சினைகள், மன அழுத்தம் என்பனவற்றைத் தவிர்த்து மகிழ்ச்சியுடன் வாழ்வைக் கழிக்க முயற்சியுங்கள்.

## அறிவுத் திறனுக்கான முதலீடு

அறிவுத் திறனை விருத்திசெய்து கொள்ள நூல்களை வாசிப்பது அவசியமாகும். இப்பழக்கம் கல்விச் செயற்பாடுகளுக்கும் பேருதவி புரியும். கட்டுரைகள் எழுதும் போது சிறந்த சொல்வளம், எழுத்துநடை மற்றும் வசனங்களைச் சரியான முறையில் பயன்படுத்தல் என்பன வாசிப்பின் மூலமே விருத்தியடைகின்றன. அத்துடன், நல்ல நூல்களை வாசிப்பது என்பது சிறந்த அறிவு விருத்திக்கான வழிமுறையுமாகும். இதன்படி, நீங்கள் கடந்த ஆண்டு எத்தனை அறிவுசார் நூல்களை வாசித்தீர்கள் என்பதனை சிந்தித்துப் பாருங்கள். அந்த எண்ணிக்கை குறைவு எனின், நீங்கள் உங்கள் அறிவுத் திறன் விருத்திக்காக முதலீடு செய்யவில்லை என்பதே அர்த்தமாகும். இதனால் இப்புத்தாண்டில் குறிப்பிட்டளவு சிறந்த நூல்களை வாசிப்பதற்கு நேரத்தையும் நல்ல நூல்களை வாங்குவதற்கு சிறு தொகைப் பணத்தையும் ஒதுக்குங்கள்.



நண்பர்களுடன் கோபித்துக் கொண்டதற்கான காரணம் என்ன?

## உங்கள் பலவீனங்களை இனங்காணுங்கள்

கடந்த ஆண்டில் நீங்கள் எதிர்நோக்கிய மோசமான சம்பவம் எது என்று சற்று யோசித்துப் பாருங்கள். பொறுமையின்மை, முன்கோபம், பொறுத்துப் போகாத இயல்பு, தூர நோக்குடன் சிந்தித்து செயலாற்றாமை என்பன இந்த நிலைமைக்கு முக்கிய காரணமாக அமைந்திருக்கலாம். மீண்டும் இவ்வாறான மோசமான சம்பவங்களை எதிர்கொள்ளாமல் இருக்க வேண்டுமாயின், உங்களுக்குள் இருக்கும் இந்தப் பலவீனங்களை இனங்கண்டு அவற்றைத் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

## கைவிட்டுப் போனவை

கடந்த ஆண்டில் கைவிட்டுப் போன விடயங்கள் எவையெனச் சிந்தியுங்கள். அதற்கமைய, புத்தாண்டில் அத்தகைய விடயங்களை உங்களால் நிறைவேற்றிக்கொள்ள முயற்சிக்க முடியும். உதாரணமாக; கடந்த ஆண்டில் விளையாட்டுப் போட்டிகளில் பங்கெடுக்க முடியவில்லையே என்று நீங்கள் வருந்தியிருக்கலாம். அவ்வாறாயின், புதிய ஆண்டில் போட்டிகளில் பங்கெடுக்க நேரத்தினை ஒதுக்கி அதற்குரிய பயிற்சிகளில் ஆர்வத்துடன் ஈடுபட முயலுங்கள்.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நைல் நாக



பாராக்கள்

**உலகின் பிரதான நாகரிகங்களில் ஒன்றான நைல் நதி நாகரிகத்தின் தோற்றத்தில் நைல் நதி, நைல் நதிச் சமவெளி மற்றும் அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் காணப்பட்ட வளங்கள் என்பன முக்கிய இடத்தை வகிக்கின்றன. புராதன எகிப்தின் முதலாவது குடியேற்றம் ஆரம்பமாகியது இற்றைக்கு ஏறக்குறைய 7,000 வருடங்களுக்கு முன்னராகும்.**

எகிப்திய சமூகத்தில் மிகச் சக்தி வாய்ந்தவரும் முக்கியத்துவம் பெற்றவருமாக மன்னரே திகழ்கின்றார். எகிப்திய மக்கள் மன்னர்களுக்கு வழங்கிய கௌரவ நாமம்தான் 'பாராக்கள்' என்பதாகும். விவ்சாய நடவடிக்கைகள், கால்நடை வளர்ப்பு என்பவை மாத்திரமல்ல; வெளிநாட்டுத் தொடர்புகளைக்கூட பாராக்கள் முறையாக மேற்கொண்டனர்.

## எச்சங்களால் வெளிச்சத்திற்கு வந்த பூர்வீகம்

நைல் நதிக்கரையில் கண்டெடுக்கப்பட்ட எச்சங்களின்படி; நைல் நதிக்கரையில் குடியேறுவதற்கு முன்னர், கி.மு.10 ஆம் நூற்றாண்டில் குறித்த ஒரு பிரதேசத்தில் வேட்டையாடியும் மீன் பிடித்தும் தமது வாழ்க்கையை ஓட்டிய மக்கள், கி.மு.8000 ஆண்டளவில் குறித்த பிரதேசத்தில் ஏற்பட்ட காலநிலை மாற்றத்தால் அல்லது வளப் பற்றாக்குறைகளால் பிற்காலத்தில் நைல் நதிக்கரையில் குடியேறியுள்ளனர் என்று கருதப்படுகின்றது.

## நவீன கற்காலம்

கி.மு.6000ஆம் ஆண்டளவில் நைல் நதிச் சமவெளியில் நவீன கற்காலத்திற்குரிய கலாசாரம் தோன்றியது. இக்காலகட்டத்தில் வெவ்வேறான பூரண அரச கலாசாரங்கள் பலவும் மேல் மற்றும் கீழ் எகிப்தில் தோன்றின.

## எகிப்திய ராச்சியம் தோன்றிய விதம்

கி.மு.3150 ஆம் ஆண்டளவில் மெனிஸ் மன்னனால் இப்பிரதேசத்தில் ஐக்கிய ராச்சியம் ஒன்று தோன்றியது. இந்த ஐக்கிய ராச்சியத்தை அக்கால எகிப்தியர்கள் 'இரு நிலம்' என்றே அழைத்தனர். நைல் நதி பெருக்கெடுத்து ஓடி அச்சூழலில் தோன்றிய வளமான கறுப்பு நிற மண் காரணமாகவே, அவ்வாறு அழைத்தனர். எகிப்திய கலாசாரம், சமயம், கலை, மொழி என அனைத்தும் வெவ்வேறான தனித்துவத்தை ஏற்படுத்தி வளர்ச்சி அடைந்தது இக்காலகட்டத்திலேயே ஆகும். இக்காலத்தை புராதன ராசதானி (கி.மு.2700-2200 வரை ),மத்திய ராசதானி (கி.மு.2200-2040 வரை), நவீன ராசதானி (கி.மு.1550-1070 வரை) என மூன்று யுகங்களாகப் பிரிக்கலாம்.

## விவசாயமும் உணவும்

நைல் நதியை அண்டிய பகுதி விவசாயத்திற்கு உகந்த நிலமன்று. ஆயினும் நைல் நதியில் அடிக்கடி ஏற்படும் வெள்ளப்பெருக்கு மற்றும் வெள்ளம் வடியும் போது விட்டுச் செல்லும் மணல், வண்டல், களிமண் என்பன நதிக்கரை பகுதிகளை வளமாக்கி பயிர்ச்செய்கைக்கு ஏற்ற நிலமாக மாற்றிவிட்டன. இதன் மூலம் விவசாயம் அமோகமாக நடந்தது. இப்பகுதியில் இறுங்கு, பார்லி, திராட்சை என்பன முக்கிய பயிராகப் பயிரிடப்பட்டன. கி.மு.2600 இல் உலகில் முதன் முதலாக கோதுமை ரொட்டி எகிப்திலேயே தயாரிக்கப்பட்டது. பார்லியில் பியரும் திராட்சையிலிருந்து வைனும் தயாரிக்கப்பட்டன.

## ஆடை அலங்காரம்

நைல் நதி சுற்றியுள்ள பகுதிகளில் ஃப்ளேக்ஸ் என்ற செடிகள் வளர்க்கப்பட்டன. இதன் தண்டுப் பகுதியிலிருந்து லினன் நூல்களை எடுத்தார்கள். லினன் நூலிலிருந்தும் பருத்தி நூலிலிருந்தும் உடைகளைத் தயாரித்தார்கள்.

சமூக அந்தஸ்த்துப்படி உடைகள் மாறுபட்டிருக்கும். சாதாரண மக்கள் வேஷ்டி போல் இடுப்பில் ஆடையும் உடலின் மேல் பகுதியில் சட்டை போல் ஒன்றும் அணிவர். பெண்கள் கவுன் அணிந்திருப்பர். பணக்காரர்களும் பிரபுக்களும் நீண்ட சட்டைகளை அணிந்திருப்பர். அரசர்கள் இடுப்பைச் சுற்றி வேஷ்டி போன்று துணி அணிந்திருப்பர். அதன்மேல் தோள் பட்டிகள், லினன் நூலால் நெய்யப்பட்ட தங்க வேலைப்பாடுகளுடைய பட்டிகளுடன் வண்ண அலங்காரம் கொண்ட உடைகளையும் அணிந்திருப்பர். இங்கு வாழும் ஆண்களும் பெண்களும் தங்கம் மற்றும் வெள்ளி நகைகளை அணிந்திருப்பர். ரத்தினக் கற்கள் பதித்த ஆபரணங்கள் முக்கிய இடத்தை வகித்தன.

## மெருகூட்டல்

நறுமணப் பொருட்கள், வாசனை எண்ணெய்கள், முகச்சாயங்கள் போன்ற அழகு சாதனங்களை ஆண்களும் பெண்களும் உபயோகித்தனர்.அத்தோடு, கண்களின் கவர்ச்சிக்கு மையும் தீட்டினர். ஆண்கள் அடிக்கடி தலைமுடியை நன்கு கழுவி வாசனைப் பொருட்களையும் மருதானியையும் தடவினர்.

## சமுதாயத்தில் பெண்கள்

இங்கு வாழ்ந்த பெண்கள் கூடை பின்னுதல், ஆடைகள் தைத்தல், நகைகள் செய்தல் போன்ற வேலைகளில் ஈடுபட்டனர். பெண்களுக்கு சமுதாயத்தில் அதிகமான உரிமைகள் காணப்பட்டன.அவர்கள் வேலை செய்து சம்பாதிக்கலாம். சொத்துக்கள் வாங்கலாம். அந்த வகையில் சட்டத்தில் ஆண்களுக்கும் பெண்களுக்கும் சம உரிமைகள் வழங்கப்பட்டிருந்தன.

## வீடுகள்

மக்களின் பாதுகாப்புக்கு ஏற்றவாறு வீடுகள் ஒன்று அல்லது இரண்டு மாடிகளாக கட்டப்பட்டிருக்கும். இவை யாவும் செங்கற்களால் கட்டப்பட்டவை. சாதாரண வீடுகளில் வரவேற்பறை, குளியலறை, படுக்கையறை போன்ற அறைகளும் காணப்படும். மரத் தளபாடங்களும் காணப்படும்.

பணக்கார வீடுகளில் பல்வேறு வசதிகளுடன் பெரிய அறைகள், வீட்டின் நடுவில் பூங்கா, பெரிய குளியல் அறைகளும் காணப்பட்டன. உட்புறக்கூரைகளில் அழகிய ஓவியங்களும் கட்டில் போன்றவற்றில் சித்திர வேலைப்பாடுகளும் செய்யப்பட்டிருந்தன.

அரண்மனைகள் தனி நகரங்கள் போன்று வடிவமைக்கப்பட்டிருக்கும். உள்ளே கோயில்களும் காணப்படும்.

## பொழுதுபோக்கு அம்சங்கள்

பண்டிகைகள், கொண்டாட்டங்கள் அடிக்கடி நடத்தப்படும்.இந்த நாட்களில் அனைவரும் ஒன்றுகூடி விருந்து, பாட்டு, நடனம் போன்ற பொழுதுபோக்கு அம்சங்களில் ஈடுபடுவர். புல்லாங்குழல், ட்ரம்பட், வீணை போன்றன இவர்களின் இசைக் கச்சேரிகளில் இடம்பிடித்த முக்கிய இசைக் கருவிகளாகும்.

## பொருட்கள் தயாரிப்பு

நைல் நதியில் கிடைத்த களிமண்ணோடு வைக்கோல் மற்றும் தண்ணீரும் சேர்த்து, பதமாக்கி வார்ப்புகளில் வைத்து தேவையான பாத்திரங்களைத் தயாரிப்பார். இந்த முறையில் செங்கற்கள், உணவு சமைக்கும்



ஸ்பிங்ஸ்





மம்மியாக்கப்பட்ட பாராக்கள் ஒருவரின் உடல் வைக்கப்பட்டிருக்கும் இடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரிக வளர்ச்சி

பாத்திரங்கள், சேமிப்புக் கொள் கலன்கள் போன்றவை தயாரிக்கப்பட்டன. பண்டைய எகிப்திய காலத்தில் அரசர்கள், கடவுள்கள் மற்றும் சமூகத்தில் உயர்ந்த இடத்தில் இருப்பவர்களுக்கும் சிலைகளை வடிப்பது வழக்கமாகும். தவிர; கற்களிலிருந்து சமையல் கருவிகளான அம்மி, ஆட்டுக்கல் போன்றவையும் தயாரிக்கப்பட்டன.

## கைத்தொழில்கள்

எகிப்தில் கிரனைட் கற்கள், பலவித மாணிக்க கற்கள், தங்கம், ஈயம்,இரும்பு, சுண்ணாம்புக்கல் போன்ற தாதுக்கள் அதிகம் கிடைத்தன. இதனை அடிப்படையாகக் கொண்டு பல தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டன. சீமெந்து தொழிற்சாலையும் ஆரம்பிக்கப்பட்டது. இவர்கள் கண்ணாடிப் பொருட்களைத் தயாரிப்பதில் அபாரமான திறமைகளைக் கொண்டிருந்தனர்.அத்துடன், கண்ணாடி ஜாடிகள், சிற்பங்கள், நகைகள் போன்றவையும் உபயோகத்தில் இருந்தன.

## வாணிப நடவடிக்கைகள்

வாணிபம் செழித்து வளர்ந்ததோடு, சந்தைகளும் பெருகின. பொருள் நிறுவைகளில் எடைக் கற்களும் பயன்படுத்தப்பட்டன. தானியங்கள், உற்பத்திப் பொருட்கள், உப்பு என்பன வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டன. மரக்கட்டைகள், வாசனைப் பொருட்கள், ஒலிவ் எண்ணெய் என்பன இறக்குமதி செய்யப்பட்டன. வியாபாரம் பெரும்பாலும் பண்டமாற்று முறையிலேயே அமைந்திருந்தது.

## மருத்துவம்

எகிப்தில் சிறந்த மருத்துவர்கள் இருந்தனர். அயல்நாட்டு நோயாளிகள்கூட எகிப்தில் வந்து சிகிச்சை பெறுவது வழக்கம். நோயாளிகளை நன்றாகப் பரிசோதித்து, சிகிச்சை அளிப்பர். மூலிகை மருத்துவம், தாயத்துகள், பிரார்த்தனைகள் ஆகியவை இவர்களின் சிகிச்சை முறைகளாகும்.

எகிப்திய மருத்துவர்கள் அறுவை சிகிச்சையிலும் நிபுணத்துவம் பெற்று விளங்கினர். காயங்களுக்கு தையல் போடுதல், எலும்பு முறிவுக்கு கட்டுகள் இடுவதிலும் சில நேரங்களில் உறுப்புகளைத் துண்டிக்கும் அறுவை சிகிச்சைகளிலும் அவர்கள் தேர்ச்சி பெற்றிருந்தனர்.




காயங்கள் குணமாக மாமிசமும் தேனும் கலந்து, அதன் மேல் வைத்து கட்டுப் போட்டனர். காயம் அழுகாமலும் பரவாமலும் இருக்க தேன் உதவியது. காயத்தால் ஏற்பட்ட வலியைக் குறைக்க 'ஓபியம்' என்ற போதை மருந்தைப் பயன்படுத்தினர். வெங்காயம், பூண்டு என்பனவற்றை அதிக அளவில் உணவில் சேர்த்துக் கொண்டால் உடல் ஆரோக்கியம் பெருகும். ஆஸ்துமா போன்ற நோய்களும் நெருங்காது என்பதையும் அவர்கள் கண்டறிந்தனர்.

## கணித அறிவும் மொழியும்

கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் என அத்தனை கணித முறைகளிலும் தேர்ந்திருந்தனர். முக்கோணங்கள், சதுரங்கள், செவ்வகங்கள், பெட்டிகள், பிரமிட்டுகள், வட்டங்கள் ஆகியவற்றின் பரப்பளவு, கொள்ளளவு தொடர்பான சூத்திரங்களையும் அவர்கள் தெரிந்திருந்தனர். பிரமிட் கட்டுவதில் பல கணித சூத்திரங்கள் பயன்படுத்தப்பட்டுள்ளமை இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகும்.

எகிப்தியர்களின் மொழி 'ஹைரோக்ளிஃப்' என்ற சித்திர மொழியாகும். எகிப்திய மொழியில் அகர வரிசை படங்களாகவே காணப்படும். அகர வரிசையில் 500 படங்கள் இருந்தன. எழுத்துக்கள் வலமிருந்து இடமாக எழுதப்பட்டன. கல்வெட்டுகள், மட்பாத்திரங்களில் இதனைக் காணலாம்.



சி.டி ஸ்கேன் பரிசோதனைக்குட்படுத்திய மம்மியொன்று

## ஸ்பிங்ஸ் (Spinx)

பிரமிட் போலவே இந்த 'ஸ்பிங்ஸ்' சிலைகளும் எகிப்திய நாகரிகத்தின் முக்கிய சின்னமாகும். இது எகிப்தின் காவல் தெய்வம் எனப்படுகின்றது. எகிப்தின் பெரிய ஸ்பிங்ஸ் கிஸா நகரில் இருக்கிறது. இதை 'கிரேட் ஸ்பிங்ஸ்' என்றும் அழைப்பர். இது 65 அடி உயரமும் 260 அடி நீளமும் 20 அடி அகலமும் உடையது. இதன் தலை மனித முகமாகவும் உடல் சிங்கத்தின் உடல் போலவும் அமைந்திருக்கும்.

## நாகரிக வீழ்ச்சி

மெனிஸ் மன்னருக்குப் பின்னர் இரண்டாம் ராமேஸெஸ் என்ற மன்னர் ஆட்சி புரிந்தார். கி.மு.1279-1213 வரை வாழ்ந்த இவர், யூத இன மக்களை அடிமைகளாக வைத்திருந்தார். யூதர்களின் தலைவன் இந்த மன்னருக்கு எதிராகப் போர்க்கொடி தூக்கினான். இதனால், இவர்கள் விரட்டப்பட்டனர். இதன் பின் லிபியா, சிரியா, பாரசீகம் (இன்றைய ஈரான்) போன்ற நாடுகள் எகிப்தைக் கைப்பற்றின. கி.மு.332 இல் மாவீரர் அலெக்ஸாண்டர் எகிப்தைக் கைப்பற்றினார். பின்னர் ரோமானியர்கள், அரேபியர்கள் என ஆட்சி கைமாறியது.

(அ)






பிரமிட்டைக் கட்டுவதில் ஈடுபட்டிருக்கும் அடிமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓர் அழகிய கிராமம்

நான் எனது விடுமுறையைக் கழிப்பதற்காக ஒரு கிராமத்திற்குச் சென்றிருந்தேன். அக்கிராமத்தில் அழகிய ஆறுகள், குளங்கள், வயல்கள் என்பன காணப்பட்டன. ஆற்றில் 'சல சல' என ஓடும் நீரின் சத்தம் என் மனதிற்கு இதமளிக்கக் கூடியதாக இருந்தது. ஆற்றங்கரை ஓரங்களில் நீண்டு வளர்ந்த கோரைப் புற்கள் மிக அழகாக அசைந்தாடின.

விண்ணைத் தொடும் அளவிற்கு உயர்ந்து வளர்ந்து காணப்பட்ட மரங்களைப் பார்க்கும்போது, என் உள்ளம் களிப்படைந்தது. பாம்பைப் போன்று நெளிந்து, வளைந்து செல்லும் ஒற்றையடிப் பாதையும் அங்கு காணப்பட்டது.



இயற்கை அன்னை அக்கிராமத்துக்கு வழங்கிய அழகிய குளமொன்றும் இருந்தது. அக்குளத்தில் அல்லி, தாமரை போன்ற மலர்களும் கொக்கு, நாரை போன்ற பறவைகளும் குளத்தின் அழகுக்கு மேலும் மெருகூட்டுவதாக இருந்தன.

அக்கிராமத்தில் வரிசை வரிசையாக வீடுகள் காணப்பட்டதுடன் ஓலைக் குடிசைகளும், அங்கொன்றும், இங்கொன்றுமாகக் காணப்பட்டன. வயல்களில் களைபிடுங்கும் பெண்கள் ஒருபுறமும், களைக் கொல்லியடிக்கும் ஆடவர்கள் ஒருபுறமாகவும் தம்பணியைச் செய்து கொண்டிருந்தனர். கொக்குகள், நாரைகள் என்பன கூட்டம் கூட்டமாக வயல் வரம்புகளில் அமர்ந்திருக்கும் காட்சி புதுமையாகவும் ரம்மியமாகவும் இருந்தது. இவ்வாறு எனது விடுமுறை நாட்களை அந்த அழகிய கிராமத்தில் இன்பத்துடனும், புத்துணர்ச்சியுடனும் கழித்தேன்.

ந.ற.பா.சஜினா,
10C, அல்மனார் மத்.கல், மருதமுனை.

# கண்களைப் பாதுகாப்போம்

படிக்கும்போது நல்ல வெளிச்சம் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவேண்டும். பதினைந்து அடி தூரத்திற்கு அப்பால் அமர்ந்திருந்தே தொலைக்காட்சி பார்க்க வேண்டும். கத்தி, ஊசி போன்ற கூர்மையான பொருட்களைக் கண்களுக்கு அருகில் வைத்து விளையாடக் கூடாது. வாகனங்களில் செல்லும் போதும், குறைந்த வெளிச்சம் உள்ளபோதும் புத்தகங்களைப் படிக்கக் கூடாது. கரட், கீரை,அப்பிள், முட்டை, பப்பாளி, மீன் போன்றவை கண்களுக்கு சிறந்த ஆரோக்கியத்தைக் கொடுப்பதால் அவற்றை விரும்பி உண்ணவேண்டும்.

அதிக நேரம் சூரியனையோ அதிகம் வெளிச்சம் உள்ள இடத்தையோ பார்க்கக்கூடாது. கணினியை உபயோகிக்கும் போது, அதன் ஒளி அளவைக் குறைத்து வைத்துப் பயன்படுத்த வேண்டும். பெற்றோர் கண்ணாடி அணிந்திருந்தால் பிள்ளையும் கண்ணாடி அணிய வேண்டி வரலாம் என்பதால் வருடத்திற்கு ஒரு முறையாவது மருத்துவப் பரிசோதனை செய்து கொள்வது சிறந்தது.



எம்.எம்.எம்.முஸ்னி,
யதாமாப், பாடசாலை.
உலஹிட்டிவல,
மல்வானை.

# முயற்சி செய்



கல்வி கற்க முயற்சி செய்
கவிதை எழுத முயற்சி செய்
அறிவைப் பெற முயற்சி செய்
அன்பாய் வாழ முயற்சி செய்
பட்டம் பெற முயற்சி செய்
பதவி உயர முயற்சி செய்
நல்லது செய்ய முயற்சி செய்
நன்மை தேட முயற்சி செய்
நல்லதை நினைக்க முயற்சி செய்
நலமாக வாழ முயற்சி செய்!

S. சரணியா, தரம்-6

# இதயமில்லாத மனிதன்



மகாராஜா ரஞ்சித் சிங் பஞ்சாப்பின் சிங்கமாகத் திகழ்ந்தார். ஒருநாள் அவர் முன்னே ஒருவனைக் கொண்டு வந்து நிறுத்தினார்கள். அவன் மீது திருட்டுக்குற்றம் சுமத்தப்பட்டிருந்தது. அவன் செய்த குற்றத்தை விசாரித்த மகாராஜா. திருடியது பெருங்குற்றமாதலால் அவனுக்கு மரண தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கினார்.

அத்தீர்ப்பின்படி, தண்டனையை நிறைவேற்றுவதற்காகக் குற்றவாளியை காவலர்கள் அழைத்துச் சென்றபோது, அந்தக் குற்றவாளி ஏதோ முணுமுணுத்துக்கொண்டே சென்றான். அவன் இவ்வாறு முணுமுணுத்தது. மகாராஜாவின் காதில் விழுந்தது. இதனால், அரசுக்கு மிகுந்த எரிச்சல் ஏற்பட்டது. அதனால் அவர், அவனை மீண்டும் தன்முன் கொண்டு வருமாறு ஆணையிட்டார்.

அந்தக் குற்றவாளி அவர் எதிரே வந்ததும் அவனைப் பார்த்து, "நீ என்ன சொன்னாய்? என்ன முணுமுணுத்துக் கொண்டு சென்றாய்? உனக்குத் தைரியமிருந்தால் நீ என்ன முணுமுணுத்தாய் என்பதை என் முகத்திற்கெதிராக கூறு பார்க்கலாம்?" என்று மிகுந்த கோபத்துடன் கேட்டார். உடனே அவன் "மகாராஜா அவர்களே, 'தங்களைப் பார்த்தால் அப்படித் தெரியவில்லையே' என்று தான் முணுமுணுத்தேன்' என்று பதில் சொன்னான்.

அதைக்கேட்ட மகாராஜா, "நீ என்ன சொல்கின்றாய் என்று எனக்கு விளங்கவில்லை. அதனால் தெளிவாக முழு விபரத்தையும் என்னிடம் கூறு" என்று உத்தரவிட்டார். "மகாராஜா அவர்களே, நான் கூறுவதைத் தயவுசெய்து கவனமாகக் கேட்க வேண்டுகிறேன். நான் சிறுவனாக இருந்தபோது, என் பெற்றோர்கள் என்னை ஒரு ஜோதிடரிடம் அழைத்துச் சென்றார்கள். அந்த ஜோதிடரும் நான் பிறந்தநாளின் நட்சத்திரம் முதலியவற்றையெல்லாம் நன்றாக ஆராய்ந்து இதயமில்லாத ஒரு மனிதரால் நான் மரண தண்டனைக்கு உள்ளாக்கப்படுவேன் என்று கூறினார். அந்த ஜோதிடர் கூறியபடி, கொடுமையான மனம் படைத்த மனிதராகத் தாங்கள் இருக்க மாட்டீர்கள் என்று என் உள்மனம் கூறிற்று. யார் கண்டார்கள்? இந்த விஷயத்தில் யார் எப்படி என்று உறுதியாகச் சொல்ல முடியாது" என்று கூறி முடித்தான் அவன்.

அவனுடைய விளக்கத்தைக் கேட்டவுடன் மகாராஜா திகைப்படைந்தார். தான் இதயமில்லாத மனிதன் தானோ என்று அவருக்கே அவருடைய உள்மனம் உறுத்தியது. இதனால், மனதளவில் வேதனையடைந்த மகாராஜா, அவனுக்கு முதலில் அளித்த மரணதண்டனையை சிறைத்தண்டனையாகக் குறைத்துத் தீர்ப்பளித்தார்.

அதுமட்டுமன்றி, தன்னை இதயமில்லாதவன், கல் நெஞ்சக்காரன் என்று மற்றவர்கள் கருதி விடுவார்களோ, என்ற எண்ணத்தில் இனி எவருக்குமே மரண தண்டனை விதிப்பதில்லை என மகாராஜா தீர்மானித்துக் கொண்டார்.

# திருட்டுக் குற்றம்

ஓர் ஊரில் இரண்டு சகோதரர்கள் இருந்தனர். அந்த ஊரில் என்ன குழப்பங்கள், திருட்டுக்கள் நடந்தாலும் நிச்சயமாக அந்த இருவரும் அதில் சம்பந்தப்பட்டிருப்பார்கள். அவர்களைத் திருத்துவதற்கு எத்தனையோ முறை முயற்சி செய்தும் அவர்களின் பெற்றோர்களால் முடியவில்லை. இறுதியில் ஊர் கோயிலில் உள்ள குரு ஒருவரிடம் தனது மூத்த மகனை அழைத்துச் சென்றார் தந்தை. அவரிடம் தமது மூத்த மகனை ஒப்படைத்துவிட்டு, இவனை எப்படியாவது நல்வழிக்குக் கொண்டு வாருங்கள் சுவாமி' என்று வேண்டினார். பின்னர் குரு சிறுவனை தன் அருகில் அமரச் செய்து 'கடவுள் எங்குள்ளான்' என்று கேட்டார். அதற்கு சிறுவன் பேசாமல் இருந்தான். இப்படி பல முறை கேட்டும் சிறுவன் வாயைத் திறக்கவே இல்லை. குருவுக்குக் கோபம் மேலிட்டு 'கடவுள் எங்கிருக்கிறார்?'என்று உரத்த குரலில் கேட்டதுதான் தாமதம். சிறுவன் எழுந்து ஓடத் தொடங்கினான். திரும்பிப் பார்க்காது தலைதெறிக்க ஓடியவன் நேரே தன் வீட்டுக்குச் சென்று ஒரு கட்டிலுக்கு அடியில் பதுங்கிக் கொண்டான்.



மூச்சிரைத்தவாறு பதுங்கியிருந்த அண்ணனைக் கண்ட தம்பி 'அண்ணா என்ன நடந்தது?' என்று கேட்டான்.'தம்பி இந்தத் தடவை கடவுளை யாரோ திருடிவிட்டார்கள். நாம் தான் வீணாக மாட்டிக் கொள்ளப் போகிறோம். அந்தப் பழியை நம் தலையில் போடப்பார்க்கிறார்கள். நாம் தொலைந்தோம் என்று பயத்துடன் அழாக் குறையாகக் கூறினான்.

பாத்திமா ஹில்மா முர்ஸித்
கொ/பாத்திமா முஸ்லிம் ம.க.




# எனது பாடசாலை

புத்தளம் மாவட்டம் சிலாபம் கல்வி வலய, நாத்தாண்டிய கல்விக்கோட்டத்தில் தும்மோதர எனும் அழகிய கிராமத்தில் எனது பாடசாலை அமைந்துள்ளது. எனது பாடசாலையின் பெயர் தும்மோதர முஸ்லிம் வித்தியாலயம். இது ஒரு கலவன் பாடசாலையாக இருப்பதுடன், இங்கு தரம்-1 தொடக்கம் க.பொ.த (சா.த) வகுப்புக்கள் வரை நடைபெற்று வருகின்றன. சுமார் இருநூறு மாணவ், மாணவிகள் இங்கு கல்வி பயில்கின்றனர். ஒன்பது ஆசிரியர்களும் ஐந்து தொண்டர் ஆசிரியர்களும் கடமையாற்றுகின்றனர். எம்.எஸ். சுஜப் அவர்கள் இங்கு அதிபராகப் பணியாற்றுகின்றார். இப்பாடசாலைக்கென தனியான விளையாட்டு மைதானம் ஒன்றும், நூல்நிலையம் ஒன்றும் இருக்கின்றன. எனது பாடசாலை, அதிபர், ஆசிரியர்களின் அயராத உழைப்பினால் மென்மேலும் வளர்ச்சியடைந்து வருகின்றது. இதனால், எனது பாடசாலை. பல்லாண்டுகாலம் நிலைத்து சிறந்த கல்விச்சேவையை ஆற்றும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை.

ஏ.எச்.எப்.சஹ்ரினா, தரம் - 5, தும்மோதர மு.வித்., கொட்டாரமுள்ள.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


அங்.இல: 3957

ப.விஜேந்தர், தரம்-07,
வ/நெளுக்குளம் கலை
மகள் வித்.,
நெளுக்குளம்.


அங்.இல: 3958

கு.தக்ஷி, தரம்- 03,
யா/புனித ஜோன்
பொஸ்கோ வித்.,
யாழ்ப்பாணம்.


அங்.இல: 3959

எம்.சுதர்ஷன்,
தரம்-3[I],
பரி/ஜோன்ஸ் ம.வித்.,


அங்.இல: 3960

தி.அரொம்,
தரம்-03
கிளி/பளை மத்திய கல்.,
கிளிநொச்சி.


அங்.இல: 3961

ச.அபிராமி,
தரம்-06[A],
யா.வேம்படி ம.உ.பாட,
யாழ்ப்பாணம்.


அங்.இல: 3962

நேசராஜ்குமார் வித்யாசாகர்,
தரம்-07,
கிளி/கிளிநொச்சி ம.வித்.,
கிளிநொச்சி.

## விஜய் மாணவர் கழகம்


அங்.இல: 3963

த.தேனுகா,
தரம்-09,
சாவகச்சேரி இந்து கல்.,
சாவகச்சேரி.


அங்.இல: 3964

எம்.நஸ்ருல்லா,
தரம்-11,
அல்.அஸ்ஹர்.மு.வித்.,
ஹெம்மாத்தகம,


அங்.இல: 3965

யோகேந்திரன் பவிஸ்கர்
தரம்-10[A],
தி/கிளிவெட்டி ம.வி.,
கிளிவெட்டி.


அங்.இல: 3966

ஏ.எஃப்.நூஸ்றா,
தரம்-10,
க.மு.அல்.அஷறப் தேசிய
கல்., அம்பாறை.


அங்.இல: 3967

எம்.எம்.எஃப்.நஸீஹா,
தரம்-11,
ஆயிஸா மகளிர் கல்.,
கல்முனை.


அங்.இல: 3968

ஸப்ரானா இல்யாஸ்,
உயர்தரம்,
அரபா தேசிய
பாடசாலை., வெலிகம.

# அதிசய ஆய்வுகூடப் பூங்கா Kew Park



உலகிலுள்ள பல பூங்காக்களைப் பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறோம். நம் நாட்டிலும்கூட பல பூங்காக்கள் உள்ளன. பொதுவாக பூங்கா என்றாலே அங்கே பல வண்ண வண்ண மலர்களும், மரம், செடி, கொடிகளும் காணப்படும். சிறியோர் முதல் முதியோர் வரை அனைவருக்கும் நல்ல பொழுதுபோக்கு இடமாகவும் பூங்கா அமைந்திருக்கும். இந்தப் பூங்காக்கள் அழகுக்காகவும் காட்சிக்காகவும் பார்வையாளர்களின் கவனத்தை ஈர்க்கும் வகையில் அமைக்கப்பட்டிருக்கும். ஆனால், உலகின் மிகப்பெரிய பூங்கா இங்கிலாந்தின் தலைநகர் லண்டன் மாநகருக்கு அருகில் கியூ (Kew) எனும் கிராமத்தில் அமைந்துள்ளது. இதனை கியூ பூங்கா (Kew Park) என அழைக்கின்றனர். இந்தப் பூங்கா பலவித ஆய்வுகளுக்குப் பயன்படுத்தப்படும் ஆய்வுகூடமாகவும் திகழ்கின்றது.



இந்த அதிசய ஆய்வுகூடப் பூங்கா லண்டனில் இருந்து 7 மைல் தூரத்தில் உள்ளது.





இது சுமார் 300 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ளது. 1750 களில் இருந்து பராமரிக்கப்பட்டு வந்த இரு பூங்காக்களின் கூட்டமைப்பே தற்போதைய கியூ பூங்காவாகும். 1750 களில் இங்கிலாந்தை ஆண்ட இரண்டாம் ஜோர்ஜ் மன்னன் மற்றும் அவரது மனைவி கரோலின் மகாராணி ஆகியோருக்குச் சொந்தமான ரிச்மண்ட் பூங்காவும் அத்தம்பதியர்களின் மூத்த மகனான இளவரசர் பிரெடரிக்கின் வசிப்பிடமாகவும் இருந்த கியூ ஹவுஸும் இணைக்கப்பட்டு பின்னாளில் கியூ பூங்காவாக உருவாகியது.

கியூ பூங்கா இரண்டு பூங்காக்களின் கூட்டமைப்பாக இருப்பதால் இதனை ஆங்கிலத்தில் 'கியூகார்டன்ஸ்' என அழைக்கின்றனர். 1757 இல் இப்பூங்காவில் பல கட்டடங்கள் கட்டப்பட்டன. 1759 இல் வேள்ஸ் இளவரசி அகஸ்தாவின் முயற்சியால் இது ஒரு முழுமையான தாவரவியல் பூங்காவாக (Botanical) உருவாக்கப்பட்டது.

கியூ பூங்காவில் 4,000 வெவ்வேறு தாவர இனங்கள் தொகுக்கப்பட்டு, வளர்க்கப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருகின்றன. உலகின் பல்வேறு பகுதிகளில் இருந்தும் கிடைப்பதற்கு அரிய தாவரங்கள் (Rare plants) அனைத்தும் இங்கு ஒருங்கே காணப்படுவது மிக முக்கிய அம்சமாகும்.

தாவர இனத்தில் மரம், செடி, கொடி, பூ, விதை, வேர் என எல்லாவற்றிலும் மிகச்சிறிய மற்றும் மிகப்பெரிய வகைகளும் இங்கு காணப்படுகின்றன. உதாரணமாக, பூக்களில் மிகப்பெரிய பூவாகிய 'ரஃப்லேசியா' இங்கு காணப்படுகின்றது. அதுமட்டுமல்ல; இலைகளில் மிகப்பெரிதான 'விக்டோரியா அமேசோனிக்கா' எனப்படும் நீர் லில்லிச்செடியும் இங்கு காணப்படுகின்றது. இந்த இலையின் விட்டம் மாத்திரம் 6 அடிகளாகும். இந்த இலைகளைப் பார்க்கையில் நீரில் மிதக்கும் பெரிய வட்டமான தட்டுகளைப் போல் அவை மிக ரம்மியமாகக் காட்சியளிக்கும்.

கியூ பூங்காவில் 3 அருங்காட்சியகங்கள் உள்ளன. அத்துடன், ஒரு நூலகமும் சில புனிதத்தலங்களும் உள்ளன. அத்தோடு, சுமார் 163 அடி உயரமான 10 மாடிகள் கொண்ட சீனர்களின் 'பகோடா' கோபுரமும் இங்கு அமைக்கப்பட்டுள்ளது. அத்தோடு, அழகிய கியூ மாளிகையும் கம்பீரமாக காட்சியளிக்கின்றது.

இங்குள்ள நூலகத்தில் சுமார் 230,000 தாவரவியல் தொடர்பான நூல்களும் 160,000 வண்ண மலர்ப்படங்களும் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கியூ மாளிகையில் பல அரச பரம்பரையினரின் நினைவுச் சின்னங்களும் உள்ளன. தாவரங்களை மிதமான வெப்பநிலையில் பாதுகாப்பாக, தூய்மையாக வைத்திருக்கப் பயன்படும் 23 கண்ணாடி வீடுகளும் உள்ளன.

1965 ஆம் ஆண்டு இப்பூங்காவில் கட்டப்பட்ட 'ஜோட்ரெல்' ஆய்வகத்தின் பயனாக, இன்றும் தாவர விஞ்ஞானம் தொடர்பான பல புதிய கண்டுபிடிப்புகள் நிகழ்ந்த வண்ணமே இருக்கின்றன. இப்பூங்கா தாவர இனப்பெயர் சூட்டலுக்கும் தாவர இன வகைப்பாட்டிற்கும் தலைமையகமாகவும் திகழ்கின்றது.

'கியூ' பூங்காவில் 3 வருடப் பயிற்சி வகுப்பு ஒன்றும் நடத்தப்பட்டு வருகின்றது. கியூ பூங்காவைப் பொதுமக்கள் பார்வையிட வசந்தகாலத்திலும் கோடைகால ஆரம்பத்திலும் அனுமதி வழங்கப்படுகின்றது.

-இரஞ்சித் ஜெயகர்

படத்தை
இங்கே
ஒட்டவும்



## விஜய் மாணவர் கழகம்

விஜய் மாணவர் கழகத்தில் இணைய விரும்புகின்றீர்களா? அப்படியாயின் அருகேயுள்ள கூப்பனை நிரப்பி உங்களின் புகைப்படத்துடன் ஒட்டி அனுப்பி வையுங்கள்

பெயர்:....................................

முகவரி:....................................

....................................

பாடசாலை:....................................

வகுப்பு:....................................

திகதி:....................................

ஏற்கனவே அனுப்பியவர்கள் மீண்டும் அனுப்புவதை தவிர்க்கவும்.

அனுப்ப வேண்டிய முகவரி :
'விஜய்'
மாணவர் கழகம்
த.பெ.எண் 2087
கொழும்பு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓவியம் வரைவோம் - 34




இவ்வாரப் பாடத்தில் பெண்களின் பல்வேறு தொழிற்பாடுகளை வரைந்து பயிற்சி பெறுவோம்.

பயிற்சி-1




### பழக்கூடைக்காரி


✱A படத்திற்கமைய, ரேகைகளால் மனித உருவத்தின் அடிப்படையை வரைந்துகொள்வோம்.

✱B யில் உள்ளவாறு மேலும் சமாந்தர மான ரேகைகளை வரைந்து படத்தில் காட்டியவாறு உருவத்தை வரைந்து கொள்வோம்.

✱C படத்தில் காட்டியவாறு தலை, முகம், கை, உடை, காலின் பாகங்களை வரைந்துகொள்வோம்.

இறுதியாக, தேவையற்ற கோடுகளை அழித்து படத்தை பூரணமாக்குவோம்.

பயிற்சி-2




### கதிரையில் அமர்ந்து புத்தகம் வாசிக்கும் பெண்

பயிற்சி-3




### குடத்தில் நீர் கொண்டுவரும் பெண்

குறிப்பு: மேலுள்ள பயிற்சி-2, பயிற்சி-3 ஆகிய படங்களை வரைவதற் கும் பயிற்சி-1 இல் வழங்கப்பட்டுள்ள ஒழுங்குமுறைகளைப் பின்பற்றுக.



நிதுல்லகஹப்பிட்டியைச் சேர்ந்த ஹுஸைன்தீன்-கரீமா தம்பதியரின் செல்வப் புதல்வன் முஹம்மட் ஹஸ்ஸான், 19.01.2011 (இன்று) தனது இரண்டாவது பிறந்தநாளைக் கொண்டாடுகின்றார். இவரை உம்மா, வாப்பா உட்பட குடும்பத்தினர் அனைவரும் அல்லாஹ்வின் அருளால் சிறப்பாக வாழ வாழ்த்துகின்றனர்.

**விஜய் 'விழா உலா' த.பெ.எண் 2037 கொழும்பு**



அராலி வடக்கு, செட்டியார் மடத்தைச் சேர்ந்த சாந்தகுமார்-வசந்தினி தம்பதியரின் செல்வப் புதல்வன் எஸ். அஸ்வின், 27.12.2010 அன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறைவனின் அருளால் நீடூழி காலம் சிறப்புடன் வாழ வாழ்த்து கின்றனர்.



கொழும்பு-15, ஹேனமுல்ல கேம்பைச் சேர்ந்த அசோகன்-கலாதேவி தம்பதியரின் செல்வப் புதல்வன் ஏ.கஜன், 07.01.2011 அன்று தனது எட்டாவது பிறந்தநாளைக் கொண்டாடினார். இவரைக் குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள் அனைவரும் இறைவன் அருள் பெற்று, சிறப்புடன் வாழ வாழ்த்துகின்றனர்.

## பிறந்தநாள் வாழ்த்துக்கள் குறித்து கவனத்துக்கு...!

'விழா உலா' பகுதிக்கு பிறந்தநாள் வாழ்த்துக்களை அனுப்புபவர்கள், குறித்த பிறந்தநாள் நிகழ்வுக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர் அந்த வாழ்த்துக்கள் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள். தாமதித்துக் கிடைப்பவை ஏற்றுக்கொள் ளப்படமாட்டாது.

## கைவண்ணங்கள்



அனுப்ப வேண்டிய முகவரி:
**கைவண்ணங்கள் த.பெ.எண் 2037 கொழும்பு**



நே.லிக்ஷன், தரம்-09, மெதடிஸ் மத்.கல்., மட்டக்களப்பு.



எஃப்.சாரா, தரம்-07, பொலன்னறுவை மு.ம.கல்., பொலன்னறுவை.



பி.சுதர்ஷன், தரம்-06, சென்.மேரிஸ் ம.கல்., பொகவந்தலாவை.




எம்.சல்மா, தரம்-06, ஹமீதியா மு.ம.வித்., கும்பலங்க.



த.ஆராதிகன், பாலர் வகுப்பு, முன்பள்ளி சிறுவர் பூங்கா, யாழ்ப்பாணம்.



எம்.திப்ஹான், தரம்-10, அல்-அமீன் மத்.கல்., எலபடகம.



பி.சேம்ராஜ், தரம்-04, [illegible]



எம்.அம்ஜாத், தரம்-11, சாஹிரா தே.பா., புத்தளம்.



என்.நிப்ராஸ், தரம்-11, அறபா தே.பா., வெலிகம.



பா.பிரபோதா, தரம்-08, சீ.சீ.தமிழ் ம.வித்., இரத்தினபுரி.



ஜா.மாதங்கி, தரம்-08, வேம்படி ம.உ./தரப் பாட., யாழ்ப்பாணம்.



சுமையா ஹுஸைன்தீன், தரம்-04, மின்ஹாத் தே.பா., திக்குவல்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேயோட்டிக்கு நேர்ந்த கதி.....



அஞ்சா நெஞ்சம் படைத்தவரும் பேயென்றால் அதனை ஓட்டித் துரத்தும் வரை ஓயாதவருமான பெரியதம்பி மாட்டுவண்டியின் பின்னால் அமர்ந்திருக்க, அவரின் உதவியாளன் வண்டியை ஓட்டிச் சென்றான். மாடுகளின் கழுத்தில் தொங்கிய கிங்கினி மணியோசையும், மாட்டுவண்டியின் கடகட சத்தமும் தவிர அவர்கள் சென்ற பாதையில் வேறு சத்தமெதுவும் கேட்கவில்லை. மாட்டுவண்டில் வேப்பங்கேணி எல்லைப்புறத்தை நெருங்கியது. அந்தவேளை...... வேப்பமரமொன்றில் தீப்பிழம்பு ஒன்று தோன்றுவதும் மறைவதுமாக இருந்தது. மாடுகள் இரண்டும் தீப்பிழம்பைக் கண்டு வெருண்டன. மேலும் நகர்ந்து முன்னேற முடியாமல் முரண்டு பிடித்தன. வண்டியைச் செலுத்தி வந்த உதவியாளன் ஒரு கணம் திகிலடைந்த போதும் மாடுகளின் மீது தொடர்ந்து தடிகளால் மாறி மாறி அடித்தான். அவை அடியின் வேதனையால் வண்டிலை அருகில் உள்ள வயல் வெளிப் பக்கமாக இழுத்துச் சென்றன.

பெரியதம்பி வண்டிலை விட்டுப் பாய்ந்து இறங்கினார். இதனைப் பார்த்த உதவியாளனும் இறங்கினான். "ஓகோ! இது பேயின் விளையாட்டோ? பார்ப்போம் ஒரு கை" என பெரிய தம்பியர் மனதில் கூறிக்கொண்டார். பின்னர் அவர் தமது உதவியாளனைப் பார்த்து "அசையாதே அப்படியே நில் இப்போது என் வேலையைப் பார்" என்று கூறிக் கொண்டு அங்கு நின்றவாறே ஏதோ, மந்திரங்களை முணுமுணுத்தார். ஆனால், எதுவும் நடந்ததாகத் தெரியவில்லை. மாடுகள் வெருட்சி அடைந்து கத்தின. தீப்பிழம்புகள் மேலும் மேலும் தோன்றி மறைந்தன. அந்த வெளிச்சத்தில் பெரியதம்பியின் உதவியாளன் ஏதோ, ஒரு கரிய உருவமொன்றினை வேப்பமரத்தில் கண்டான். இதனால் அவன் உடல் நடுங்கியது. சிறிது நேரத்தில் பேயின் அட்டகாச சிரிப்பொலி எங்கும் எதிரொலித்தது. இதனைப் பார்த்த பெரிய தம்பியர் உதவியாளனைப் பார்த்து" பயப்படாதே! இது கொஞ்சம் அகோரம் கூடிய பேய்தான். இதனை நான் அடக்குகிறேன். நீ வண்டில் பக்கம் நில்" என்று கூறியவாறு தனது இடுப்பில் செருகியிருந்த மந்திரக்கோலைக் கையில் எடுத்தார். பின்னர் ஏதோ! மந்திரங்களைக் கூறியவாறே நெற்றிக்கும் மூக்கிற்கும் நேராக அக்கோளைப் பிடித்தவாறு நின்றார். அப்பொழுது மரத்திலிருந்த கரிய உருவம் விரைவாகக் கீழிறங்கியது.




அரியாலையூர் சி.சிவதாசன்

இதனைக் கண்ணுற்ற பெரியதம்பி தன் மந்திரத்திற்குக் கட்டுப்பட்டுத்தான் பேய் கீழே இறங்குவதாக எண்ணினார். ஆனால், அந்த உருவம் வேப்பமரத் தடியை விட்டுப் பெரியதம்பியும் அவர் உதவியாளனும் நின்றிருந்த இடத்தை நோக்கி விரைந்து வந்து கொண்டிருந்தது. இதனைக் கண்ட பெரியதம்பியின் உதவியாளன் மேலும் அங்கு நிற்பது ஆபத்து எனக் கருதி ஓட முற்பட்டான்.

ஓட முற்பட்ட அந்த உதவியாளனை வேப்பமரத்தடிப் பேய் படு பயங்கரமாகத் தாக்கியது. அதனைத் தாங்க முடியாத அவன் வேதனையால் ஓலமிட்டான். மீண்டும் பேய் அவன் முகத்தில் மிகக் கொடூரமாகத் தாக்கியது. அதனால், அவனால் எழுந்திருக்க, முடியவில்லை. சத்தமிடவும் இயலவில்லை. தரையில் சரிந்த அவன் உடல் வேதனையால் துடிதுடித்தது. அவன் படும் துன்பத்தைக் கண்டு பேய் மேலும் அட்டகாசமாய் சிரித்தது.

பின்னர் பெரியதம்பியை நோக்கிப் பேய் ஆவேசத்துடன் வேகமாக நகர்ந்து வந்தது. அதன் முகம் கோபத்தால் விகாரமாக இருந்தது. பற்கள் அகோரமாகக் காட்சியளித்தன. எனினும், பெரிய தம்பியர் அஞ்சவில்லை. தன் கையிலிருந்த மந்திரக் கோலால் பேயைத் தாக்கினார். மந்திரக்கோல் இரண்டாக முறிந்தது. அவர் ஓடிச் சென்று வண்டியில் கிடந்த சாட்டையை எடுத்தார். பேய் அவரை நெருங்கி வந்தபோது. அவர் சற்றுப் பின்வாங்குவதுபோல் பாவனை செய்து சாட்டையால் பேயை அடித்தார். இவ்வாறு, பல முறை அடித்தார். இதனால் அது மேலும் ஆவேசம் கொண்டது. பெரிய தம்பிக்கு மிக அருகில் வந்த பேய் அவரின் கொட்டைப் பாக்களவு குடும்பியைப் பற்றியது அவரை அங்கும் இங்குமாகச் சுழற்றியது. பேயோட்டி பெரிய தம்பியின் கையிலிருந்த சாட்டை அவர் கையிலிருந்து நழுவியது. பெரிய தம்பியர் வேதனையால் கூச்சலிட்டார். பேயின் பிடி தளருவதாக இல்லை. பெரியதம்பியின் துணிச்சல் எல்லாம் எங்கோ பறந்துவிட்டது. பேயை விரட்டும் மந்திரத்தை மறந்து போகுமளவிற்கு அவர் நிலை தடுமாறினார். செய்வதறியாது தவித்தார். அவ்வளவுதான் பேய் அவரைத் தூக்கி வீசியது. நிலத்தில் வீழ்ந்த அவர் பின்னர் எழுந்திருக்கவே முடியாதபடி, அவரின் உயிர் அடங்கிவிட்டது. இரத்தம் வாயிலிருந்தும் மூக்கிலிருந்தும் வெளியேறிக் கொண்டிருந்தது.

பேய் வெற்றிக் களிப்போடு வயல்களைக் கடந்து சற்றுத் தொலைவில் இருந்த மயானத்தை நோக்கி இருளில் விரைந்து சென்றது.

(தொடரும்)

# வாழ்வதற்கு வழி

வசந்த், சுந்தர் இருவரும் அண்ணன் தம்பிகள், அவர்கள் இருவரும் மீன்பிடித்துத் தமது வாழ்க்கையை நடத்தி வந்தனர். ஒருநாள் நண்பகல் நேரம், அவர்கள் இருவரும் வீட்டில் உணவருந்திக் கொண்டிருக்கையில் பிச்சைக்காரன் ஒருவன் அங்கே வந்தான். எலும்பும் தோலுமாக இருந்த அவனைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. அவர்களிடம் அவன், "சாப்பிட்டுப் பல நாட்கள் ஆகின்றன. ஏதேனும் உணவு இருந்தால் தாருங்கள்!" என்று கெஞ்சினான். இரக்கப்பட்ட வசந்த் தன்னிடம் இருந்த உணவை அவனுக்குக் கொடுத்தான்.

இதைப் பார்த்த சுந்தர், 'அண்ணா! இப்படிப்பட்ட சோம்பேறிகளிடம் இரக்கம் காட்டக் கூடாது!' என்று எரிச்சலுடன் கூறினான்.

அடுத்த நாளும் அந்தப் பிச்சைக்காரன் அங்கே வந்தான். அன்றும் வசந்த் அவனுக்கு உணவு கொடுத்தான். மீண்டும் இவன் இங்கே வந்து பிச்சை எடுக்கிறானே என்று கோபம் கொண்டான் சுந்தர். 'சோம்பேறிப் பயலே! அடுத்த முறை உன்னை இங்கே நான் பார்த்தால் தொலைத்து விடுவேன்!' என்று கத்தினான். எனினும், மூன்றாவது நாளும் பிச்சைக்காரன் பிச்சை கேட்டு அங்கே வந்தான். அவனைக் கண்டு கோபம் கொண்ட சுந்தர், அங்கிருந்த தூண்டில் ஒன்றை எடுத்துக் கொண்டான். அவனைத் தரதரவென்று இழுத்துக்கொண்டு ஏரிக்கரைக்குச் சென்றான்.

'இப்படிப் பிச்சை எடுத்து இழிவான வாழ்க்கை நடத்துகிறாயே? உனக்கு மீன் பிடிக்கக் கற்றுத் தருகிறேன். இந்தத் தூண்டிலை வைத்துப் பிழைத்துக்கொள்!' என்றான். அத்துடன் அவனுக்கு மீன் பிடிக்கவும் கற்றுக் கொடுத்துவிட்டு அங்கிருந்து சென்றான். அதன் பின்னர் அந்தப் பிச்சைக்காரன் அவர்கள் வீட்டுப் பக்கம் வருவதேயில்லை.



பல ஆண்டுகள் சென்றன. ஒரு நாள் செல்வந்தர் ஒருவர் அழகிய குதிரைகள் பூட்டப்பட்ட வண்டியில் வசந்த் சுந்தரின் வீட்டுக்கு வந்தார். அவர் கையில் தங்கத்தால் செய்யப்பட்ட சிறிய தூண்டில் ஒன்று இருந்தது. வசந்தும், சுந்தரும் அவரைப் பார்த்தனர். அவர் தங்கத் தூண்டிலை சுந்தரிடம் கொடுத்தார். 'என் அன்புப் பரிசாக இதனை வைத்துக் கொள்ளுங்கள்!' என்றார். அத்துடன், அவர் வசந்த்தைக் கண்டு கொள்ளவேயில்லை.

தன் வீட்டிற்கு முன்னர் வந்த பிச்சைக்காரன்தான் அவன் என்பது வசந்துக்குத் தெரியவந்தது. கோபம் கொண்ட அவன், 'நீ உணவு இல்லாமல் திரிந்த போது உனக்கு உணவு கொடுத்துக் காப்பாற்றியவன் நான். எனவே, எனக்குத் தான் இந்தத் தங்கத் தூண்டில் உரியது. என்னிடம் அதனைத் தா!' என்று வசந்த் கத்தினான். ஆனால், அவரோ, 'இது உங்கள் தம்பிக்குத்தான் உரியது' என்று உறுதியாகச் கூறினார். இதனை வசந்த் ஏற்றுக் கொள்ளாமல் தொடர்ந்து. அவருடன் வாதாடினான்.

அவர்களின் வாக்குவாதத்தைக் கேட்ட பெரியவர் ஒருவர் அங்கு வந்தார். அவர் நடந்ததையெல்லாம் அவர்களிடம் விசாரித்து அறிந்துகொண்டார். பின்னர் அவர், வசந்த்தைப் பார்த்து 'நீ இவருக்கு உணவு அளித்துக் காப்பாற்றியது உண்மைதான். நீ செய்த உதவி இவர் வாழ்க்கையில் எந்தவிதமான மாற்றத்தையும் ஏற்படுத்தவில்லை. உன் தம்பியோ இவர் வாழ்வதற்கு வழி காட்டினான். அதைப் பயன்படுத்தி இவர் இந்த நிலைக்கு உயர்ந்திருக்கிறார். நிலையான உதவி செய்த சுந்தருக்கு இவர் தூண்டிலைப் பரிசு அளித்தது சரியே. இந்தத் தங்கத் தூண்டில் சுந்தருக்கே உரியது. இதுவே எனது தீர்ப்பு!' என்றார்.

அந்தப் பெரியவர் மீது மிகுந்த மரியாதைகொண்டிருந்த வசந்தும் அவரின் தீர்ப்பை ஏற்றுக்கொண்டான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## ආයුබෝවන්
## ஆயுபோவன்
## வணக்கம்

இன்றைய பாடத்தில் சிங்கள மொழியில் அமைந்த சிறிய கட்டுரை ஒன்றை நோக்குவோம்.

### මගේ බෝනික්කා

අපේ මාමා මට බෝනික්කෙක් තෑගි දුන්නේය. ඒ බෝනික්කාව මාමා පිටරටින් ගෙන ආවේය. බෝනික්කා ඇස් නටවයි. බොත්තම එබූ විට කතා කරයි. සිනාසෙයි. මගේ බෝනික්කා හරි ලස්සණයි. හැමෝම බෝනික්කාට ඩයනා කියා කියති.

உச்சரிப்பு

### மகே போனிக்கா

அபே மாமா மட்ட போனிக்கெக் தேகி துன்னேய. ஏ போனிக்காவ மாமா பிடரட்டின் கென ஆவேய. போனிக்கா எஸ் நட்டவய். பொத்தம எபு விட்ட கதாகறய். சினாசெய். மகே போனிக்கா ஹறி லஸ்ஸணய். ஹெமோம போனிக்காட டயனா கியா கியதி.

### எனது பொம்மை

எங்கள் மாமா எனக்கு ஒரு பொம்மையை அன்பளிப்புச் செய்தார். அந்த பொம்மையை மாமா வெளிநாட்டில் இருந்து கொண்டுவந்தார். பொம்மை கண் சிமிட்டும். பொத்தானை அழுத்தினால் கதைக்கும். சிரிக்கும். எனது பொம்மை மிக அழகானது. எல்லோரும் பொம்மையை டயனா என்று அழைப்பார்கள்.

### பயிற்சி

இடைவெளியை நிரப்புக.

1. බෝනික්කෙක් --------------- දුන්නේය.
2. ------------------------- එබූ විට කතා කරයි.
3. බෝනික්කා හරි ----------------------------



★ மேலும் ஒரு சிறிய கட்டுரையை நோக்குவோம்.

### සූර්ය උදාව

ඉර නැගෙනහිර දිශාවෙන් උදාවේග පාන්දරින් කුකුළෝ හඬලති. නැගෙනහිර අහස ටිකෙන් ටික ආලෝකමත් වේගජනයා අවදි වී දෛනික කටයුතුවල යෙදෙති.

### சூர்ய உதாவ

இர நெகெனஹிர திஷாவென் உதாவெய். பாந்தரின் குகுளோ ஹன்டளதி. நெகெனஹிர அஹஸ டிகென் டிக ஆலோகமத் வே. ஜனயா அவதி வீ தைனிக கடயுதுவள யெதெதி.

### சூரிய உதயம்

சூரியன் கிழக்குத் திசையில் உதிக்கும். அதிகாலையில் சேவல்கள் கூவும். கிழக்கு வானம் மெல்ல மெல்ல வெளுக் கத் தொடங்கும். மக்கள் துயில் எழுந்து அன்றாட நடவடிக்கைகளில் ஈடுபடுவர்.




★ இறந்தகால தனி வாக்கியங்களில் (Past Simple Tense) காணப்படுகின்ற, செய்வினை (Active voice) வாக்கியங்களை, செயற்பாட்டு வினை (Passive voice) வாக்கியங்களாக மாற்றியமைக்கும் முறையினை மேலும் உதாரணங்களுடன் இங்கே பயில்வோம்.

(அ) அந்தச் சிறுவன் பொதியை எடுத்துச் சென்றான்.
The boy took the parcel.
(இறந்தகால தனி வாக்கியம்-செய்வினை)
(Active voice of the past simple tense)

(ஆ) அந்தப் பொதி - சிறுவனால் எடுத்துச் செல்லப்பட்டது.
That parcel was taken by the boy.
(இறந்தகால தனி வாக்கியம்- செயற்பாட்டு வினை)
(Passive voice of the past simple tense)

---

(இ) நாங்கள் அந்த வேலையைச் செய்தோம்.
We did that work.
(இறந்தகால தனி வாக்கியம்- செய்வினை)
(Active voice of the past simple tense)

(ஈ) அந்த வேலை எங்களால் செய்யப்பட்டது.
That work was done by us.
(இறந்தகால தனி வாக்கியம்-செயற்பாட்டு வினை)
(Passive voice of the past simple tense)

---

(உ) லலிதா இந்தப் படத்தை வரைந்தார்.
Lalitha drew this picture.
(இறந்தகால தனி வாக்கியம்-செய்வினை)
(Active voice of the past simple tense)

(ஊ) இந்தப் படம் லலிதாவால் வரையப்பட்டது.
This picture was drawn by Lalitha.
(இறந்தகால தனி வாக்கியம்-செயற்பாட்டு வினை)
(Passive voice of the past simple tense)

---

(எ) எனது சகோதரி அந்தக் கடிதத்தை எழுதினாள்.
My sister wrote that letter.
(இறந்தகால தனி வாக்கியம்-செய்வினை)
(Active voice of the past simple tense)

(ஏ) அந்தக் கடிதம் எனது சகோதரியால் எழுதப்பட்டது.
That letter was written by my sister.
(இறந்தகால தனி வாக்கியம்-செயற்பாட்டு வினை)
(Passive voice of the past simple tense)

---

(ஐ) எனது சகோதரன் அந்தப் பந்தை எறிந்தான்.
My brother threw that ball.
(இறந்தகால தனி வாக்கியம்-செய்வினை)
(Active voice of the past simple tense)

(ஒ) அந்தப் பந்து எனது சகோதரனால் எறியப்பட்டது.
That ball was thrown by my brother.
(இறந்தகால தனி வாக்கியம்-செயற்பாட்டு வினை)
(Passive voice of the past simple tense)

**குறிப்பு:-** Was thrown-Compound verb.
எறியப்பட்டது-கூட்டு வினைச்சொல்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தெரிந்து கொள்வோம்



✱ மாயா நாகரிகம் எங்கு தோன்றியது?
**மெக்ஸிகோ உட்பட லத்தீன் அமெரிக்க நாடுகளில்**



✱ ஒபெக் (Opec) அமைப்பின் தலைமைக் காரியாலயம் எங்குள்ளது?
**வியன்னா**

✱ லேசர் 'LASER' என்பதன் விரிவாக்கம் என்ன?



**Light Amplification by stimulated Emission of Radiation**
**லேசர் சிகிச்சை என்பது ஒளிக் கற்றையைப் பாய்ச்சுவதன் மூலம் செய்யப்படும் சிகிச்சையாகும்.**



✱ 'லக்டோ மீற்றர்' என்றால் என்ன?
**பாலிலுள்ள தண்ணீரை அளக்கும் கருவி**

✱ உலகில் மிக உயரமான இடத்திலுள்ள ஏரி எது?



**'டிடிகா ஏரி' இது உலகில் மிக நீண்ட மலைத் தொடராகிய 'அண்டிஸ்' மலைத்தொடரில் காணப்படுகின்றது.**



✱ பொற்கோயில் எங்குள்ளது?
**இந்தியாவின் அமிர்தசராஸ் நகரில் அமைந்துள்ளது. இது சீக்கிய மதத்தவர்களின் புனித கோயிலாகும்.**

✱ இலங்கையில் போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றும்போது, சிறந்த முறையில் இருந்த நூலகத்தை அழித்தனர். அந்த நூலகம் என்ன பெயரால் அழைக்கப்பட்டது?
**சரஸ்வதி மஹால்**



# அமெரிக்கா பாதுகாப்பு செலவுகளைக் குறைத்துள்ளது

எதிர்வரும் ஐந்து வருடங்களுக்கு அமெரிக்க பாதுகாப்புத் திணைக்களத்திற்கென ஒதுக்கப்பட்ட பாதுகாப்பு நிதியிலிருந்து 7,700 அ.டொலர் நிதியை குறைத்து விடுவதற்கு அமெரிக்கா அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

வீழ்ச்சி நிலையில் உள்ள பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் நோக்கிலேயே இந்தத் தீர்மானத்தை அமெரிக்கா எடுத்திருப்பதாக சுட்டிக் காட்டப்படுகின்றது.

நீண்ட காலமாகவே, அமெரிக்கா தமது உலக ஆதிக்கத்தை



நிலைநிறுத்துவதற்கென பாதுகாப்பு விடயங்களுக்கு பெருமளவு நிதியைச் செலவிட்டு வந்துள்ளது.

ஈராக் யுத்தம் முடிவிற்கு வந்துள்ள போதிலும் ஆப்கான் யுத்தம் இன்னும் முடிவடையவில்லை. இதற்கெனவும் பெருமளவு நிதியை அமெரிக்கா செலவிட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

இத்தகைய நிலையில் அமெரிக்கா பாதுகாப்புத் திணைக்களத்தினால் புதிதாக மேற்கொள்ளப்பட இருந்த ஆயுத உற்பத்தித் திட்டங்கள் சிலவற்றை நிறுத்திவிடுவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.





அற்லஸ் வழியே உலகைக் காண்போம்...


# காலநிலை மாற்றத்தால் தேயிலை உற்பத்தி வீழ்ச்சி

காலநிலை மாற்றத்தின் காரணமாக, இந்தியாவில் தேயிலை உற்பத்தியில் பாரிய பின்னடைவு ஏற்பட்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

குறிப்பாக, தேயிலை உற்பத்தியில் முன்னணியில் உள்ள



'அசாம்' மாநிலத்திலுள்ள தேயிலை உற்பத்தியாளர்கள் இது தொடர்பாக தமது கவலையை வெளியிட்டுள்ளனர்.

உஷ்ண நிலையில் மாற்றங்கள் ஏற்பட்டமையால் இந்த நிலை ஏற்பட்டிருப்பதுடன் தேயிலையின் சுவையிலும் மாற்றம் ஏற்பட்டிருப்பதாகவும் குறிப்பிடப்படுகின்றது.

அசாமில் உற்பத்தியாகின்ற தேயிலையானது உடல் ஆரோக்கியத்திற்குப் பயனுடையது என்பதால் ஏராளமான மேற்குலக நாட்டவர்கள் தமது காலை நேர உணவிற்குப் பின்னர் 'அசாம்' தேநீரை அருந்துவதை வழமையாகக் கொண்டிருப்பதாகவும் செய்திகள் சுட்டிக்காட்டுகின்றன.

## அற்லஸ் கேள்வி - 291

**கேள்வி:** காலநிலை மாற்றத்தினால் எந்த நாட்டில் தேயிலை உற்பத்தி வீழ்ச்சி கண்டுள்ளது?

சரியான விடை.....................................

**உங்கள் விடையுடன்- பெயர், முகவரி, வகுப்பு, பாடசாலை முகவரி, வீட்டு முகவரி, அருகிலுள்ள நகரம், மாவட்டம் முதலிய விபரங்களைத் தபாலட்டையில் மாத்திரம் எழுதி அனுப்ப மறவாதீர்கள்.**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

**அற்லஸ் வழியே
உலகைக் காண்போம், கேள்வி - 291,
விஜய், த.பெ.எண் 2037, கொழும்பு.**

போட்டி இல - 289 இன் சரியான விடை: 1.5 மில்லியன் அ.டொலர்

**பரிசு பெறுவோர்**

எஸ்.கே.மொரின்
132/360, டிமெல் வத்தை,
கிராண்ட்பாஸ், கொழும்பு-14.

பஸ்னா அன்வர்தீன்,
95, ஸன்டிஸ் வீதி, வத்தேகம, திக்குவல்லை.

கா.மிதுஷினி,
65,ஆரியகம, ஹட்டன்.

# பாகிஸ்தான் அரசியல் குழப்பநிலை தீர்ந்தது

பாகிஸ்தானின் ஆளும் கூட்டணியிலிருந்து பிரிந்து சென்றதாக அறிவித்திருந்த 'முட்டாஹிடா குவாமி' எனப்படும் எம்.கியூ.எம்.கட்சி மீண்டும் அரசாங்கத்துடன் கூட்டிணையத் தீர்மானித்ததையடுத்து அந் நாட்டில் ஏற்பட்டிருந்த அரசியல் குழப்பநிலை முடிவிற்கு வந்துள்ளது.



'முட்டாஹிடா குவாமி' கட்சி அரசாங்கத்திற்கான ஆதரவை விலக்கிக் கொண்டதன் பின்னர், எதிர்க்கட்சிகள் இணைந்து அரசாங்கத்திற்கு எதிரான நம்பிக்கையில்லாப் பிரேரணையொன்றைக் கொண்டுவர உத்தேசித்திருந்தன. எனினும், அவ்வாறான சந்தர்ப்பத்தில் ஆட்சி கவிழாத வகையில் அரசாங்கத்திற்கு ஆதரவாக இருப்பதற்கு நவாப் ஷெரீப்பின் பாகிஸ்தான் அவாமி லீக் கட்சி தீர்மானித்திருந்தது. எனவே, ஆட்சிக் கவிழ்ப்புத் திட்டம் சாத்தியப்படாத விடயமாக அமைந்தது. அத்துடன், அரசாங்கமும் எரிபொருள் விலைகளைக் குறைப்பதற்கும் சம்மதித்தது.

எனவே, எரிபொருள் விலைக் குறைப்பை வரவேற்பதாக காரணம் காட்டி 'முட்டாஹிடா குவாமி' கட்சி அரசாங்கத்துடன் மீண்டும் இணையத் தீர்மானித்துள்ளது.

# தெரிந்து கொள்வோம்

✱ மனித உறுப்புகளில் இன்சுலினை சுரக்கும் சுரப்பி எது?
**பங்கிரியால் எனும் நாளமில்லா சுரப்பி.**



✱ 'ஸ்பெக்ரம்' ஊழல் இன்று இந்திய அரசியலில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. அந்தவகையில் ஐக்கிய அமெரிக்க அரசியலில் ஜனாதிபதி நிக்சனைப் பதவி இழக்கச் செய்த ஊழல் எது?
**வோட்டர் கேட் ஊழல் ஆகும்.**



✱ அண்மைக் காலம் வரை 9 கோள்கள் சூரியனைச் சுற்றி வருகின்றன என்று ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. அந்த 9 கோள்களில் ஒன்று 'கோள்' என்ற அந்தஸ்தை இழந்தது. அக் கோளின் பெயர் என்ன?
**புளூட்டோ, இது சூரியனைச் சுற்றுவதில்லை.**

✱ சிங்கப்பூரின் தலை நகரம் எது?
**சிங்கப்பூர் நகரம்**





✱ 'செஞ்சிலுவை' அடையாளம் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் அடையாளமாகும். அரபு நாடுகளின் செஞ்சிலுவைச் சங்கத்தின் அடையாளம் என்ன?
**செம்பிறை**

✱ சார்க் நாடுகளின் தலைமையகம் எங்கே உள்ளது?
**நேபாளத்தின் காத்மாண்டுவில்**

**தொகுப்பு: உடுவை பரந்தாமன்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜயசூரிய, வாஸ் ஏன் இடம்பெறவில்லை?



உலகக் கிண்ணப் போட்டியில் கலந்து கொள்ளவுள்ள இலங்கை அணியின் 15 பேரைக் கொண்ட குழாத்தில் சனத் ஜயசூரியவும், சமிந்த வாஸூம் இடம்பெறாமை குறித்து கிரிக்கெட் அபிமானிகள் பலர் ஆச்சரியம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து கருத்துத் தெரிவித்துள்ள தெரிவுக் குழுவின் தலைவர் அரவிந்த டி சில்வா, "சனத் ஜயசூரிய, சமிந்த வாஸூம் தலைசிறந்த வீரர்கள் என்பதில்

## அரவிந்த பதில்



சந்தேகமில்லை. ஆனால், இவர்கள் இரண்டு பேரும் அண்மைக் காலத்தில் வெளிப்படுத்திய திறமைகள், பின்னடைவுகள் ஆகியனவற்றைக் கவனத்தில் கொண்டே நிராகரிக்கப்பட்டுள்ளனர். இத் தீர்மானத்தை எடுப்பதில் மிகுந்த கவலையும், சிரமத்தையும் எதிர்நோக்க வேண்டியிருந்தது. எனினும், ஏனைய நாடுகளின் இளம் வீரர்களுக்கு இணையாகப் போட்டியிடக்கூடிய வீரர்களைத் தெரிவு செய்யும்போது, ஜயசூரிய, வாஸ் இரண்டு பேரும் பின்னடைவு நிலையிலேயே உள்ளனர்'' என்று குறிப்பிட்டுள்ளார்.

# சிறந்த வீரராக மெஸ்ஸி தெரிவு



உலகக் கிண்ண கால்பந்தாட்ட சம்மேளனத்தினால் உலகின் சிறந்த கால்பந்தாட்ட வீரராக ஆர்ஜென்டினா வீரர் லயனல் மெஸ்ஸி தெரிவாகியுள்ளார்.

இந்த விருது இவருக்கு வழங்கப்படும் என்று ஆரம்பத்தில் எதிர்பார்க்கப்படவில்லை. வேறு சில வீரர்களின் பெயரே இந்த விருதிற்கு பரிந்துரைக்கப்படும் என எதிர்பார்க்கப்பட்டது. எனினும், கணிப்புக்களையும் தாண்டி மெஸ்ஸி சிறந்த வீரராக தெரிவாகியுள்ளார்.

இதற்கு முன்னர் ஹொலன்ட் வீரர் பெஸ்டன் 1988, 1989 ஆம் ஆண்டுகளில் அடுத்தடுத்து சிறந்த வீரருக்கான விருதினைப் பெற்றதன் பின்னர் தற்போது, மெஸ்ஸிதான் அடுத்தடுத்து இதே விருதைப் பெற்ற வீரர் என்ற பெருமையையும் பெறுகின்றார்.

# இலங்கை மே.இ.தீவுகள் போட்டிகள் ஒத்திவைப்பு

இலங்கை-மே இந்திய தீவுகளிடையே இலங்கையில் நடைபெற இருந்த ஒருநாள் போட்டிகள் பின்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இலங்கையில் நிலவுகின்ற சீரற்ற காலநிலையின் காரணமாகவே, பின்போடப்பட்டுள்ள மேற்படி போட்டிகள் இந்த வருடம் நடைபெறவுள்ள உலகக் கிண்ணப் போட்டிகளுக்கு முன்னதாக நடைபெறும் என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

முன்னதாக இலங்கை-மேற்கிந்திய தீவுகள் அணிகளுக்கிடையே நடைபெற்ற மூன்று டெஸ்ட் போட்டிகளும் மழையின் குறுக்கீட்டினால் வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தன. எனவே, இத்தகைய நிலையில் ஒருநாள் போட்டிகளை நடத்துவது உசிதமானதல்ல என்பதற்கிணங்கவே 5 போட்டிகளைக் கொண்ட ஒரு நாள் போட்டிகள் பின்போடப்பட்டுள்ளன.

# கொல்கத்தா அணியின்மீது கங்குலியின் ரசிகர்கள் சீற்றம்



இந்தியாவில் நடைபெறவுள்ள ஐ.பி.எல்.போட்டிகளுக்கென கொல்கத்தா அணியின் சார்பாக சௌரவ் கங்குலி ஏலத்தில் எடுக்கப்படாததற்கு எதிர்ப்புத் தெரிவிக்கும் வகையில் கொல்கத்தா நைட்ரைட்ஸ் அணியின் உரிமையாளரான நடிகர் ஷாருக்கானின் கொடும்பாவியை கங்குலியின் ரசிகர்கள் எரித்துள்ளனர்.

மொத்தத்தில் கொல்கத்தா அணி மாத்திரமன்றி ஏனைய அணிகளாலும் கூட கங்குலி விலைக்கு வாங்கப்படவில்லை. இதன் காரணமாக, ஐ.பி.எல். போட்டியில் கங்குலி விளையாட வாய்ப்புக் கிடைக்காத நிலையே ஏற்பட்டுள்ளது. எனவே, அவரது ஆட்டத்தைக் கண்டுகளிக்க சந்தர்ப்பம் கிட்டாத காரணத்தால் ரசிகர்கள் ஆர்ப்பாட்டம் செய்துள்ளனர். திட்டமிட்டே கங்குலி இவ்வாறு ஓரங்கட்டப்பட்டுள்ளதாகவும் இதனால் கொல்கத்தா நைட்ரைடர்ஸ் அணி பங்குபற்றும் போட்டிகளை பகிஷ்கரிப்போம் என்றும் கங்குலியின் ரசிகர்கள் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஐ.பி.எல்.போட்டிகளில் கொல்கத்தா அணியில் இடம்பெற்றிருந்த கங்குலியை அந்த அணி இம்முறை தக்க வைத்துக் கொள்ளவில்லை என்பதற்காகவே, ரசிகர்களின் கோபப் பார்வை அந்த அணியின்மீது திரும்பியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மக்காயா நிட்னி ஓய்வு பெற்றார்

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் வேகப்பந்து வீச்சாளரான மக்காயா நிட்னி ஓய்வுபெற்றுள்ளமையையிட்டு ஏராளமான சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் தமது கவலையை வெளியிட்டுள்ளனர். இந்தியா-தென்னாபிரிக்கா அணிகளிடையே கடந்த சில தினங்களுக்கு முன்னர் நடைபெற்ற 20/20 போட்டியின் போதே, நிட்னி சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார்.

இவரது ஓய்வை முன்னிட்டு திரைக்கலைஞர்களின் விசேட பிரியாவிடை வைபவமும் நடைபெற்றது.

வலதுகை வேகப்பந்து வீச்சாளரான 33 வயதுடைய நிட்னி ஓய்வு பெறும்போது, 101 டெஸ்ட் போட்டிகளில் கலந்துகொண்டு 390 விக்கெட்களையும், 173 ஒரு நாள் போட்டிகளில் கலந்துகொண்டு 266 விக்கெட்டுகளையும் பெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

1998 ஆம் ஆண்டு ஜனவரி 16 ஆம் திகதி நியூஸிலாந்து அணிக்கு எதிரான தனது முதலாவது ஒரு நாள் போட்டியில் அறிமுகமாகிய நிட்னி அன்று தொடக்கம்



தென்னாபிரிக்க அணிக்காக வேகப் பந்து வீச்சில் தனது பங்களிப்பை செலுத்தி வந்துள்ளார். நிட்னி 2009 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தின் பின்னர் ஒருநாள் போட்டிகளில் கலந்து கொள்ளவில்லை. இத்தகைய நிலையிலேயே இம்முறை 20/20 போட்டிகளின் போது, தனது ஓய்வை அவர் அறிவித்துள்ளார்.

# 'பாட்டா' வினா-1 வெற்றி பெற்றவர்கள்....

'பாட்டா' நிறுவனமும் 'விஜய நியூஸ் பேப்பர்ஸ்' நிறுவனமும் இணைந்து விஜய், விஜய பத்திரிகைகளினூடாக, நடத்துகின்ற வினா-விடை போட்டியின் முதலாவது போட்டியில் வெற்றியீட்டியோரைத் தெரிவு செய்தல் 'விஜய நியூஸ்பேர்ப்பஸ்' நிறுவனத்தில் இடம்பெற்றது. இதன்போது 'பாட்டா' நிறுவனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கெஷர் எலக்ஸ் பன்டுரோ வெற்றியாளர்களைத் தெரிவு செய்தார். இந்நிகழ்வில் 'பாட்டா' நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரிகளான அஜித் போதினா, கொடதொயெல், ரொபட் சமந்குமார, சனத் பாலசூரிய, ஆகியோரும் 'விஜய



நியூஸ் பேப்பர்ஸ்' நிறுவனத்தின் குறியீட்டு முகாமையாளர் சுஜித் பத்திரனவும் நிறுவனத்தின் நிறைவேற்று அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

**வினா,1 போட்டிகளில் வெற்றியீட்டியோரில் 'விஜய்' பத்திரிகையின் சார்பாக கலந்துகொண்டு வெற்றியீட்டிய பத்துப் பேர் வருமாறு;**

- ஏ.எம்.எஃப், மஹ்முதா, 125, கப்புவத்தை, தெனிப்பிடிய, வெலிகம.
- ஏ.எம்.ஹுதெய்ஃபா, 125, கன்கம, சீனன்கோட்டை.
- ஏ.ஸி.ஃபாத்திமா ருகையா, 65/19, சென் ஜோசப் வீதி, கொழும்பு-14.
- ஏ.கலைகாந்தன், 233/132, ஹேனமுல்லை முகாம், கொழும்பு-15.
- ஆர்.பவதாரனி, 67, பெனிதுடுமுல்ல, நாவலப்பிட்டி.
- பி.என்டனி, 29, எலதொலுவ வீதி, பதுளை.
- அஸ்வத், 02, ராசாவின் தோட்டம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.
- எஸ்.கிரிஜா, 41/1, பிரம்படி வீதி, கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.
- அமிலேஸ் ஜெகநாதன், இல.36/1, சர்வோதய வீதி, சின்ன ஊரணி, மட்டக்களப்பு.
- என்.சுமையா,151, மீரிபன்னை வீதி, தர்கா நகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





'வோர்ஜின் கெலக்டிக்' ஓடுதளம்




# 'ஸ்பேஸ்ஷிப்-2' விண்வெளிச் சுற்றுலா




ரிச்சர்ட் ப்ரேன்சன்

விண்வெளிக்கு மனிதர்களை சுற்றுலா அனுப்பும் 'வோர்ஜின் கெலக்டிக்' திட்டத்திற்கமைய, விண்வெளி ஓடம் செல்வதற்கான ஓடுதளம் (Runway) அமைக்கும் பணிகள் அண்மையில் நிறைவடைந்துள்ளன. அத்துடன், விண்வெளிக்கு சுற்றுலாப் பயணிகளை அனுப்புவதற்கான இறுதிக் கட்டப் பரீட்சார்த்த முயற்சிகளும் தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதன்மூலம், பொது மக்கள் விண்வெளிக்குச் சுற்றுலா சென்று வருவதற்கான வாய்ப்புகள் நெருங்கிக்கொண்டிருக்கின்றது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

'வோர்ஜின் கெலக்டிக்' எனும் நிறுவனமே இந்த விண்வெளிச் சுற்றுலாவுக்கான ஏற்பாடுகளைச் செய்து வருகின்றது. இத்திட்டத்திற்கான பணிகள் கடந்த 2005 ஆம் ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டன. அந்த ஆண்டிலிருந்தே விண்வெளிச் சுற்றுலாவுக்கான முன்பதிவுகளும் கட்டணப்பதிவுகளும் இடம்பெறத் தொடங்கின. இதற்கமைய, குறித்த சில மாதங்களில் சுமார் 380 பேர் தலா 2 லட்சம் டொலர் பணத்தை வைப்புச் செய்திருந்தனர்.

எதிர்வரும் 2012 ஆம் ஆண்டில் இந்த விண்வெளிப் பயணங்கள் ஆரம்பிக்கப்படவுள்ளன. விண்வெளிக்கு சுற்றுலா செல்லும் பணியில் 'ஸ்பேஸ்ஷிப்-2' என்ற விண்ணோடம் ஈடுபடுத்தப்படவுள்ளது. இது 18 மீற்றர் நீளம் கொண்டது. இதில் ஆறு இருக்கைகள் உள்ளன. புவியீர்ப்பு விசை இல்லாத விண்வெளியில் செல்லும் போது, பாதிப்புக்கள் ஏற்படாத வகையில் இந்த விண்வெளிச் சுற்றுலா ஓடம் அமைக்கப்பட்டுள்ளது. இதன்படி, குறித்த விண்வெளிப் பயணத்திற்கு முன்னர் இந்த ஓடம் பூமியில் ஓடுவதற்கு தேவைப்படும் 2 மைல் நீளமும் 60 மீற்றர் அகலமும்கொண்ட ஓடுதளம் அமைக்கும் பணி அண்மையில் நிறைவடைந்துள்ளது. இதற்கான விழாவில் நியூமெக்சிகோ ஆளுநரும் வோர்ஜின் கெலக்டிக் நிறுவனருமான ரிச்சர்ட் ப்ரேன்சன் , விண்வெளிக்கு செல்லப் பதிவு செய்தவர்கள் மற்றும் சில முக்கிய பிரமுகர்களும் கலந்து கொண்டனர்.

அங்கு உரையாற்றிய ரிச்சர்ட் ப்ரேன்சன்: "விண்வெளிக்கு செல்லும் பயணிகளை அழைத்து



'ஸ்பேஸ்ஷிப்-2'

செல்வதற்கான இரண்டாவது விண்வெளிக்காலம் தற்போது ஆரம்பமாகியுள்ளது. இந்தத் திட்டத்தில் நாங்களும் கலந்துகொள்வதில் பெருமை அடைகிறோம். எனது பெற்றோர் 90 வயதை நெருங்குகின்றனர். எனவே, விண்வெளிக்கு எனது பெற்றோரை அழைத்துச் செல்லத் திட்டமிட்டுள்ளேன். எதிர்காலத்தில் விண்வெளியில் 'ஹோட்டல்' ஒன்று கட்டப்படும் என்றும் நம்புகிறேன்" என்றார்.

அப்பலோ திட்டத்தின்போது, சந்திரனில் கால் பதித்த இரண்டாவது மனிதரான எட்வின் ஒல் [illegible] இவ்விழாவில் கலந்துகொண்டிருந்தார். அவர் அங்கு உரையாற்றுகையில், "சாதாரண மனிதர்களும் விண்வெளிக்குச் செல்வதற்கான வாய்ப்பு தற்போது ஏற்பட்டுள்ளது என்பது மகிழ்ச்சியைத் தருகின்றது. அந்தப் பயணத்தில் ஒரு பயணியாக நானும் கலந்துகொள்ள விரும்புகிறேன்" என்றார். இவர்களைத் தவிர, ஏற்கனவே முன்பதிவு செய்துள்ள பயணிகளும் அங்கு தமது கருத்துக்களைத் தெரிவித்தனர். பயணிகளின் பாதுகாப்புப் பற்றி ரிச்சர்ட் ப்ரேன்சன் கருத்துத் தெரிவிக்கையில்; "யார் விண்வெளிக்கு செல்வதாக இருந்தாலும் பாதுகாப்பு என்பது மிக முக்கியமானது. இதற்காக விண்வெளிக்கு செல்லும் விமானத்தில் பல சோதனைகளை செய்து வருகிறோம். இன்னும் 12 முதல் 18 மாதங்களில் விண்வெளிக்கு பயணிகளை அனுப்பி வைப்போம். தற்போது இறுதிக் கட்ட பரீட்சார்த்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்றார்.

# 372 வருடங்களுக்குப் பின்னர் தோன்றிய சந்திரகிரகணம்




சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் பூமி வருவதையே 'சந்திரகிரகணம் என்கிறோம். இதன்போது, சூரியனிலிருந்து சந்திரனை நோக்கி வரும் ஒளிக்கதிர்கள் பூமியால் மறைக்கப்படுகின்றன. அத்தகையதொரு சந்திரகிரகணம் கடந்த டிசம்பர் இறுதி வாரமளவில் நிகழ்ந்துள்ளது.



ஆனால், இந்த சந்திரகிரகணத்தின் முக்கியத்துவம் என்னவெனில், இது 372 வருடங்களுக்குப் பின்னர் தோன்றியமையாகும். அதாவது, குளிர்காலத்தில் நிகழ்ந்த சந்திரகிரகணம் என்றும் இதனைக் கூறலாம். இந்த சந்திரகிரகணம் சுமார் 72 நிமிடங்கள் வரை நீடித்துள்ளது. இதன்போது, சிவந்த நிறத்தில் சந்திரன் காணப்பட்டதுடன், வட அமெரிக்கா,அவுஸ்திரேலியா மற்றும் ஐக்கிய ராச்சியம் உட்பட உலகின் பல பகுதிகளில் இதனை நன்கு அவதானிக்கக் கூடியதாகவும் இருந்துள்ளது. இதுபோன்றதொரு சந்திரகிரகணம் 2094 ஆம் ஆண்டுவரை மீண்டும் நிகழ வாய்ப்பில்லை என்றும் கூறப்படுகின்றது. ஆனால், இந்த சந்திரகிரகணமானது, இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் தோன்றவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# டிஸ்கவரியின் பயணம் தாமதம்

சுமார் 16 நாடுகள் இணைந்து விண்வெளியில் நிர்மாணித்து வருகின்ற சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி நிலையத்திற்கு விண்வெளி வீரர்களை அழைத்துச் செல்கின்ற 'டிஸ்கவரி' விண்கலத்தின் இறுதிப் பயணம் நியமிக்கப்பட்டுள்ள திகதியிலிருந்து மேலும் தாமதமாகலாம் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



டிஸ்கவரி எரிபொருள் தாங்கி பழுதுபார்ப்பு

சர்வதேச விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்குத் தேவையான பொருட்களை எடுத்துச் செல்லல், விண்வெளி வீரர்களை விண்வெளிக்கு அனுப்புதல் மற்றும் பூமிக்கு அழைத்து வரல் ஆகிய பணிகளில் 'டிஸ்கவரி' விண்கலம் ஈடுபட்டு வருகின்றது. இந்நிலையில், டிஸ்கவரியின் பயணக்காலம் நிறைவடையும் நிலையில் அதன் இறுதிப் பயணமானது எதிர்வரும் பெப்ரவரி 3 ஆம் திகதியளவில் இடம்பெறும் என திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், அதன் எரிபொருள் தாங்கியில் கோளாறு [illegible] திட்டமிடப்பட்டுள்ள பயணத் திகதியில் மாற்றம் ஏற்படலாம் என நாஸா அ[illegible]



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## விஜய் வாசகர் மடல்






'நைல் நதிக்கரையில் தோன்றிய நாகரிகம்', 'கண் நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவோம்', 'இலங்கையின் தொழிற்துறை அபிவிருத்தி', 'பசி எப்படி ஏற்படுகின்றது' போன்ற ஆக்கங்கள் பயன்தரக்கூடிய தகவல்களைத் தாங்கி வந்திருந்தன. உனக்கு எனது நன்றியையும் பாராட்டையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**த.ஆராதிகன்,**
**தபால் பெட்டிச் சந்தி,**
**திருநெல்வேலி.**

'நிலவைப் பற்றிய விசித்திரத் தகவல்கள்' எனும் ஆக்கத்தினூடாக, நிலவு பற்றிய மேலதிக தகவல்களைப் பெறக்கூடியதாக இருந்தது. 'டயரி' குறித்த ஆக்கம் அது தொடர்பிலான சகல தகவல்களையும் சுருக்கமாகவும் விளக்கமாகவும் தாங்கி வந்திருந்தது.

**எஃப்.ஆதிலா,**
**அஸ்-ஸம்ஸ் மு.வித்,**
**நிவ் எல்பிட்டிய.**

தரம் 5 இல் கல்வி கற்கும் எனக்கு விஜய்யில் பிரசுரமாகின்ற புலமைப் பரிசில் மாதிரி வினாத்தாள் மிகவும் பிரயோசனமாக அமைகின்றது. 'வேப்பமரத்தடிப் பேய்' தொடர்கதை திகிலூட்டுவதாகவும் விறுவிறுப்பாகவும் அமைந்துள்ளது. 'விண்வெளித் தகவல்கள்' என்றும்போல் பயன்தரக்கூடியதாகவே இருந்தது.

**கி.டானியா,**
**பாக்கியம் தே.கல்., மாத்தளை.**

'இதயத் துடிப்பைக் கண்காணிக்கும் சிப்', 'நிலவைப் பற்றிய வித்திரத் தகவல்கள்', 'கண் நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவோம்', 'வாரம் ஒரு நாடு' போன்ற அம்சங்கள் எனக்கு மிகவும் பயனளித்தன. தொடர்ந்தும் இவை போன்ற பல பயனுள்ள தகவல்களைத் தாங்கி வர வாழ்த்துகின்றேன்.

**யூ.எம்.தில்சான்,**
**தரம்-9, அஸ்-ஸிராஜ் ம.வித்.,**
**அக்கரைப்பற்று.**

'பசி எப்படி ஏற்படுகின்றது', 'கண்நோய்', 'நம் நாட்டுத் தொழிற்துறைகள்', 'ஆரோக்கியமாக வாழ சரியான முறைகள்', 'வியர்வை ஏற்படுவதால் உள்ள நன்மைகள்' உட்பட பல நல்ல தகவல்களைத் தாங்கி வந்த நீ, ஒவ்வொரு இதழிலும் பல்வேறு வயதினரையும் திருப்திப்படுத்தக் கூடிய ஆளுமையைக் கொண்டிருக்கிறாய் என்பதை அறிந்துகொண்டேன்.

**அர்ஷத் ஹிஸாம்,**
**பிரதான வீதி, டிக்கோயா.**

'புராதன காலத்தில் சவர்க்காரம்' எனும் சிறு ஆக்கம் சுவாரஸ்யமாக இருந்தது. இதனூடாக, சவர்க்காரத்தின் ஆரம்பம் பற்றி அறியக் கூடியதாக இருந்தது. 'நைல் நதிக் கரையில் தோன்றிய நாகரிகம்' எனும் ஆக்கம் பாடசாலைக் கல்விக்குப் பயன்படும் விதத்தில் அமைந்திருந்தது. இந்த ஆக்கத்தில் பிரசுரமாகியிருந்த ஒவ்வொரு சிறுகுறிப்பும் பூரண விளக்கத்தை அளித்தது.

**கெபின் பீற்றர்,**
**மைல் போஸ்ட் ஒழுங்கை,**
**கொழும்பு-03.**

நீ பிள்ளைகளுக்கான அறிவுசார் வாரப்பத்திரிகை அன்று; அறிவைத் தேடும் அனைவருக்குமான வாரப்பத்திரிகை ஆகும். அனைவரும் பயன்பெறக்கூடிய வகையில் உனது ஆக்கங்கள் அமையப் பெற்றுள்ளன. இந்த இதழ்தான் என்று குறிப்பிட முடியாதளவுக்கு நீ ஒவ்வொரு வாரமும் எம்மை வியப்பூட்டி வருகின்றாய்.தொடர்ந்தும் வெற்றி நடை போட வாழ்த்துகின்றேன்.

**சஜீவ் ரவிக்குமார்,**
**சங்கத்தானை, சாவகச்சேரி.**

'கண் நோயிலிருந்து பாதுகாப்புப் பெறுவோம்', 'வியர்வை ஏற்படுவதனால் உள்ள நன்மைகள்', 'தெரிந்து கொள்வோம்', 'டயரி', 'நைல் நாகரிகம்', 'தொலைக்காட்சியை இயக்கக்கூடிய புதுவகைக் கருவி கண்டுபிடிப்பு' போன்ற ஆக்கங்கள் உட்பட நீ தாங்கி வந்த அனைத்துப் படைப்புகளும் சிறப்பானவை .

**ஹஸ்மின் கபீர்,**
**மஹியங்கனை வீதி, பதுளை.**

**இந்த இதழில் (19.01.2011) வெளியாகியிருக்கும் ஆக்கங்கள் குறித்து உங்கள் விமர்சனங்களை தபாலட்டையில் மாத்திரம் எழுதி எமக்கு அனுப்பி வையுங்கள்.**
**அனுப்ப வேண்டிய கடைசித் திகதி 26.01.2011.**

**அனுப்ப வேண்டிய முகவரி:** வாசகர் மடல், 'விஜய்' த.பெ.எண் 2037, கொழும்பு.




தயாரிப்பு - நுஸ்பா கௌஸ்

1, 2, 3, 4, 5 என இலக்கமிடப்பட்டுள்ள பகுதிகளுக்கான விடைகளை தபால் அட்டையில் மாத்திரம் ஒட்டி 2011.01.26ஆம் திகதிக்கு முன்னர் எமக்குக் கிடைக்கக்கூடியவாறு அனுப்பி வையுங்கள்.

**அற்லஸ் அறிவுக்கு விருந்து 296**
**விஜய் - த.பெ.எண் 2037, கொழும்பு**


### பொருத்தமான விடையில் கோடிடுக — 4

1. XXIV (26/14/24)
2. L (50/100/500)
3. MXII (112/512/1012)
4. XLVII (47/34/97)
5. CV (1005/85/105)

### சரியான எண்ணிக்கையில் வட்டமிடுக — 2




### நேரம் யாது? — 3



### பிழைகளைத் திருத்தி எழுதுக — 5


1. சீரற்ற காலநிலையினால் மக்கள் நெருக்கடிகளுக்கு ஆளாகியுள்ளன.
.......................................................
2. மளையகப் பகுதிகளில் மண்சறிவு அபாயம் நிலவுகின்றது.
.......................................................
3. சூறாவளியால் மரங்கள் சரிந்து விழுந்தது.
.......................................................
4. வெல்லத்தினால் பாதிக்கப்பட்டோருக்கு உலர் உணவுகளை வழங்க ஏட்பாடுகள் செய்யப்பட்டன.
.......................................................

### வித்தியாசங்களில் X அடையாளமிடுக — 1



## அறிவுக்கு விருந்து 293 விடைகள்

**போட்டி: 01**



**போட்டி: 03**




**போட்டி: 04**

1. நகைஈகை இன்சொல் இகழாமை நான்கும் வகைஎன்ப வாய்மைக் குடிக்கு.
2. எண்என்ப ஏனை எழுத்துஎன்ப இவ்விரண்டும் கண்என்ப வாழும் உயிர்க்கு.
3. வாய்மை எனப்படுவது யாதெனின் யாதொன்றும் தீமை இலாத சொலல்.

**போட்டி: 05**

1. சேய்மை 2. கட்டளை 3. candle
4. சிம்மாசனம் 5. harbour

## அற்லஸ் அறிவுக்கு விருந்து - 293 பரிசுபெறும் அதிர்ஷ்டசாலிகள்...

**போட்டி: 01**
கு.நேசல்யா, 4/A, பழம் வீதி, கந்தர்மடம்.

**போட்டி: 02**
எஃப். ஷஹ்லா, 67, அடிகுல்பிடிய, பானகமுவ.

**போட்டி: 03**
எம்.சுஜாத், 328, செயிலான் வீதி, கல்முனை-03.

**போட்டி: 04**
எஃப். ருஹ்மா, 10,8 ஆம் வீதி, மஸ்கெலியா.

**போட்டி: 05**
நா.சுபகேதன், 15, ஆடியபாதம் வீதி, நல்லூர்.

**பாராட்டுப் பெறுவோர்:**

- ஜெ.துவாரகேஷ், கொழும்பு-14.
- ஸஹ்ரான் முர்ஷீட், உக்குவளை.
- ஞா.ஜதுர்சன், பரந்தன்.
- பி.செரீனா, பண்டாரவளை.
- எஃப்.நுஸ்ரா, ஹிங்குல.
- எஸ்.திவ்யா, மன்னம்பிட்டி.
- ஏ.மிப்தாஹ், கந்தளாய்.
- ம.கடம்பேஸ்வரன், வட்டுக்கோட்டை.
- ஆர்.மொஹமட், பதுளை.
- யூசுப் அலி மொஹமட், திஹாரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யோகாசனம் பயில்வோம் 9

## ஹலாசனம்

முதலில் செய்த சர்வாங்காசனம் விபரீதகரணி ஆசனங்களை செய்யக்கூடியவர்கள் அந்த நிலையில் இருந்து கைகளை நீட்டித் தரையில் வைத்தபடியே கால்களைப் பின்புறமாக மடக்கியபடித் தரையில் முட்டச் செய்ய வேண்டும். முக்கியமாக இவ்வாறு உடலை வளைக்கும்போது, கால்கள் வளைக்கப்படக்கூடாது. சுவாசம் சாதாரணமாக 5 நிமிடங்கள்வரை செய்தால் போதுமானது. இங்கு ஹலாசனம் என்பதில் ஹலா என்பதன் அர்த்தம் கலப்பை என்பதாகும். கலப்பை போட்டு நிலத்தினை உழுதால் நிலம் எப்படி பண்படுகிறதோ அவ்வாறே இந்த ஆசனத்தைச் செய்தால் உடல் பண்படும் என்பதாகும்.

இந்த ஆசனம் செய்துவர வயோதிபத்தன்மை தள்ளிப் போடப்படும். இளமைத் துடிப்பு மீண்டும் உண்டாவதை உணரலாம். முள்ளம் தண்டு வளைக்கப்படுவதனால், அப்பகுதிக்கு புதிய இரத்தம் பாய்ச்சப்பட்டு புத்துணர்ச்சி ஏற்படுகின்றது. இந்த ஆசனத்தின் மூலம் வாதம் சம்பந்தமான வியாதிகள் நாரிப்பிடிப்பு



ஆஸ்துமா மற்றும் கபம் சம்பந்தமான நோய்கள் நீங்கும்.

**கிரேன்மாஸ்டர் ஆறுமுகம் ராஜா**


**குறிப்பு:** கடந்த இதழில் வெளிவந்த பெயரையும் ஆறுமுகம் ராஜா என்று திருத்தி வாசிக்கவும்.

# 'நன்றி' என்னும் சொல்லின் மகிமை

'நன்றி' என்னும் சொல்லுக்கு எந்த அளவு மகிமை உண்டு என்பதுபற்றி பௌத்த மதத்தில் வரும் ஒரு நிகழ்வின் மூலம் அறியலாம்.

ஒரு நாள் மாலை நேரம், புத்தமதத் துறவி ஒருவர் தம்மை மறந்து புத்த மத மந்திரங்களைச் சொல்லிக் கொண்டிருந்தார். அப்போது, திருடன் ஒருவன் மடத்திற்குள் நுழைந்தான். அவன் கையில் கூர்மையான கத்தி ஒன்று இருந்தது. துறவியைப் பார்த்து அவன், 'பணத்தைக் கொடு; இல்லையேல் உன்னைக் கொன்று விடுவேன்!' என்று மிரட்டினான்.

'எனக்குத் தொல்லை தராதே. அந்த மேசை இழுப்பில் பணம் உள்ளது.' என்றார் புத்தமதத் துறவி அத்திருடன் அந்த மேசை இழுப்பை இழுந்து அதிலிருந்த பணத்தை எடுத்தான். 'எல்லாப் பணத்தையும் எடுத்துச் சென்று விடாதே. அரசுக்கு வரி கட்ட வேண்டிய பணமும் அதில் உள்ளது. சிறிது தொகையை வைத்துவிட்டுப் போ' என்றார் துறவி.



அவர் சொன்ன படியே சிறிது தொகையை வைத்துவிட்டு, மீதிப் பணத்தை திருடன் மூட்டையாகக் கட்டினான். பின்னர், அவன் அந்தப்பண மூட்டையைத் தோளில் சுமந்தபடியே, அங்கிருந்து வெளியேற முயன்றான்.

'அன்பனே! யாராவது பரிசு கொடுத்தால், நன்றி சொல்ல வேண்டும் என்று உனக்குத் தெரியாதா?' என்று கேட்டார் துறவி.

'நன்றி!' என்று சொல்லிவிட்டுப் புறப்பட்டான்.

அடுத்த நாளே அத்திருடன் காவலர்களிடம் சிக்கிக் கொண்டான். தான் செய்த திருட்டுகளை எல்லாம் சொன்ன அவன், மடத்தில் திருடியதையும் சொன்னான்.

சாட்சி சொல்வதற்காக நீதிமன்றத்திற்குத் துறவி அழைக்கப்பட்டார். 'உங்கள் மடத்தில் இவன் திருடினானா? சொல்லுங்கள்?' என்று கேட்டார் நீதிபதி.

'என்னைப் பொறுத்தவரையில் இவன் திருடன் அல்ல. நான்தான் பணத்தை இவனுக்குக் கொடுத்தேன். இவன் எனக்கு நன்றி சொன்னான்!' என்றார் அவர்.

எனினும் ஏனைய குற்றங்களுககாக, அவனுக்குத் தண்டனை வழங்கப்பட்டது. தண்டனை முடிந்து விடுதலை பெற்ற அவன், நேராக புத்த துறவியை நாடிவந்து தனது பாவங்கள் தவறுகளுக்காக வருந்தினான். பின்னர் துறவியின் சீடர்களில் ஒருவன் ஆனான். நன்றி என்ற சொல்லின் மகிமையால் ஒரு திருடனே சிறந்த பக்தனாக மாறினான்.

# கொள்ளிவாய்ப் பிசாசு

சில கிராமங்களில் கொள்ளிவாய்ப் பிசாசு திரிவதாகக் கூறிக்கொள்வதைக் கேள்விப்பட்டிருக்கிறோம். உண்மையில் கொள்ளிவாய்ப் பிசாசு என்று ஒன்று இருக்கிறதா? திடீர் திடீர் என காரணமின்றி தீ ஜூவாலைகள் தோன்றுவதையே





கொள்ளிவாய்ப் பிசாசு என்று கூறுகிறார்கள். ஆனால், கொள்ளிவாய்ப் பிசாசு என்று ஒன்று இல்லையென்றே அறிவியலாளர்கள் கூறுகின்றனர். அப்படியானால், இவ்வாறான தீ ஜூவாலைகள்- திடீரெனத் தோன்றுவதன் காரணம்தான் என்ன? மரங்களிலிருந்து விழுந்து பூமிக்குள் செல்லும் இலைகள் மற்றும் உயிர்பொருட்கள் ஆகியன பக்றீரியாவின் தாக்கத்தினால் அழுகி, 'மீத்தேன்' எனும் வாயு உருவாகின்றது. இவ்வாறு பூமியின் சதுப்பு நிலப் பகுதிக்குள் உண்டாகும் 'மீத்தேன்' வாயு பூமியின் மேற்பரப்பில் இருக்கும் சிறு துளைகளின் மூலம் வெளியில் வருகின்றது. இந்த மீத்தேன்



வாயுவானது சாதாரண வெப்ப நிலையில் தீப்பிடித்து எரியும் தன்மையுடையது. அதனால், பூமியிலிருந்து வெளிவரும் மீத்தேன், வாயுமண்டலத்துக்குள் வந்ததும் தீப்பிடித்து எரிய ஆரம்பிக்கின்றது.

இந்த விபரம் தெரியாதவர்கள் தான் இந்த தீ ஜூவாலைகளைப் பார்த்து கொள்ளிவாய்ப் பிசாசு என்கின்றனர்.

# முதலாவது விடுமுறை தினம்

இன்று பல்வேறு விடுமுறை தினங்கள் உள்ளன. இந்த விடுமுறை தினங்களில் முதன் முதலாக



நடைமுறைக்கு வந்த விடுமுறை தினம் எது என்றால் அது புதுவருட தினம்தான். இந்தப் புதுவருட காலம். புது வருடம் பிறந்து சுமார் இரண்டு வாரங்கள்வரை அல்லது ஒரு மாதம் வரை கூடத் தொடராக நினைவுகூரப்படுகிறது. அந்தவகையில், இக்காலப் பகுதியில் நாம் யாரையாவது சந்திக்க நேரிடுகையில் 'புத்தாண்டு வாழ்த்துக்கள்' அல்லது 'ஹெப்பி நியூஇயர்' என்று கூறி நமது அன்பை வெளிப்படுத்திக் கொள்கிறோம்.

இந்தப் புதுவருட விடுமுறை தினம்தான் மிகப் பழைமையான விடுமுறை தினமுமாகும்.

அத்துடன் புதுவருட பாரம்பரிய உணவு வகைகள் அதிர்ஷ்டத்தைக் கொண்டுவரும் என்றும் ஒரு நம்பிக்கையும் உண்டு.

# எழில்மிகு வானவில்

மலை காலங்களில் தோன்றும் வானவில்லைப் பார்ப்பது கண்கொள்ளாக் காட்சியாகும். அழகான இயற்கைக் காட்சிகளில் மிகவும் சிறப்புடையது வானவில் என்று கூறலாம். வானவில் எப்படித் தோன்றுகின்றது?

சூரியனிடம் இருந்து கிடைக்கும் வெள்ளைநிற ஒளி, அனைத்து நிறங்களும் அடங்கிய ஒரு கலவையாகும். முகம் பார்க்கும் கண்ணாடியின் சாய்வான விளிம்பை அல்லது சோப்பு நுரையின் குமிழை சூரிய ஒளி ஊடுருவும்போது அந்த , வெள்ளைநிற ஒளியானது பல நிறங்களாகத் துண்டாடப்படுகின்றது. அதன் விளைவாக செம்மஞ்சள், சிவப்பு, மஞ்சள், பச்சை, ஊதா ஆகிய நிறங்கள் உருவாவதைப் பார்க்கிறோம். இதேபோலத்தான் மழை நீரை சூரியஒளி ஊடுருவும்போதும் 'வானவில்' தோன்றுகிறது.

இன்னொரு முக்கிய விடயம், வானவில்லைப் பார்க்க வேண்டுமென்றால் நமக்குப் பின்புறம் சூரியனும், நமக்கு முன்னால் மழையும் பெய்ய வேண்டும். இரண்டுக்கும் மத்தியில் நாம் இருந்தால் மட்டுமே வானவில்லைப் பார்க்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கணினி ஐயங்கள்

**★ 'மல்டி டச்' டிவைஸஸ் என்று அழைக்கப்படுவது எதனை?**

டச் பேட் (Touch Pad) அல்லது டச் ஸ்கிரீன் (Touch Screen) ஆகியன தொடுகைத் திரைகொண்ட கணினிகளாகும். இவை ஸ்பரிஸத்தின்போதுதான் இயங்குகின்றன. எனினும், ஒரு தடவையில் (ஒரு ஸ்பரிஸத்திற்கு) ஒரு கட்டளையை மட்டுமே இடமுடியும். மாறாக ஒரே தடவையில் பல ஸ்பரிஸங்களை செய்தால் அவை இயங்குவதில்லை.




எனவே, ஒரே தடவையிலான பலவித ஸ்பரிஸங்களை உணர்ந்துகொண்டு சமகாலத்தில் இயங்கக்கூடிய புதிய உதிரிப்பாகமொன்று தயாரிக்கப்பட்டுள்ளது. இதுவே 'மல்டி டச் 'டிவைஸஸ்' என்று அழைக்கப்படுகின்றது. புதிதாக அறிமுகமாகியுள்ள மெக்புக் லெப்டொப் 'மல்டி டச் டிவைஸஸ்' ரகத்தைச் சேர்ந்ததாகும்.



**★ கணினிக்கு டி. வி. கார்ட் ஒன்றை செலுத்திப் பார்க்கின்ற காட்சிகளை வீடியோ ஃபைல் (Video file) ஆக சேவ் (Serve) செய்வது எவ்வாறு?**

டி.வி.கார்ட் கொண்டு கணினியில் தொலைக்காட்சியைப் பார்ப்பதென்றால், அதற்கென உள்ள விசேட மென்பொருள் ஒன்றைப் பயன்படுத்த வேண்டும். உரிய 'கார்ட்டை' வாங்கும்போது, அதற்குப் பொருத்தக்கூடிய மென்பொருளையும், அதனுடன் பெற்றுக் கொள்ளலாம்.

இதன் உதவியுடன் பார்க்கின்ற காட்சிகள் 'ஹார்ட்' டிஸ்க்கினுள் சேமித்துக் (Serve) கொள்ளவும் முடியும்.






**★ கணினியிலுள்ள 'டிவிடி டிரைவிற்குள் (DVD Drive) உட்செலுத்தப்படும் டிவிடி(DVD) உள்ளே அரைகுறையாகச் சென்று இறுகிவிடுவதுண்டு. இதன்போது, குறித்த 'டிவிடி' யை மீண்டும் வெளியே எடுப்பதற்கென அதற்குரிய அழுத்தியை (Eject Button) அழுத்தினாலும், டிரைவ் டிரே (Drive tray) வெளியே வராது. அவ்வாறே, டிரை ஹைறக்கனை ரைட் கிளிக் செய்தாலும், Eject என்ற கட்டளையை வழங்கினாலும், குறித்த டிவிடியை உட்கொண்டு சென்ற டிரே/தட்டு, வெளியே வருவதில்லை. இப்படியான சந்தர்ப்பங்களில் உள்ளே உள்ள DVD யை எவ்வாறு வெளியே எடுப்பது?**



முதலில் இதற்கென ஆரம்பகட்ட நடவடிக்கையொன்று உள்ளது. அதாவது, டிரைவ்விற்கு (Drive) அருகே சிறியதோர் 'துளை' இருப்பதை அவதானிக்கலாம். இந்த 'துளை' யின் மூலம் மெல்லிய கம்பியொன்றை உட்செலுத்தி இறுக்கமாக அழுத்தினால், குறித்த டிரைவ் டிரே திறந்து வெளியே வந்துவிடும். இதன்பின்னர் வழமைபோல் டிரைவ் டிரேயைப் பயன்படுத்த முடியும். மாறாக இவ்வாறு செய்தபின்னரும் தொடர்ந்தும் அவ்வாறே இயங்க மறுக்குமாயின் குறித்த டிரைவிற்கு மின்சாரம் சரியான அளவில் வழங்கப்படுகின்றதா? என்பதைப் பரீட்சித்துப் பார்த்து அதனை நிவர்த்தி செய்தல் வேண்டும்.

**★ டிபக்கர்ஸ் (Debuggers) என்று குறிப்பிடப்படுவது எதனை?**

சகல வகையிலும் முழுமை பெற்ற கணினிப் புரோகிராம் (Programme) ஒன்றை உருவாக்குவது சாத்தியப்படக் கூடியதல்ல. கணினி புரோகிராம்களை வடிவமைத்து அவற்றைச் செயற்படுத்தும்போது, அதில் உள்ள பொருந்தாத தன்மைகள் மற்றும் கோளாறுகள் தெரிய வருவதுண்டு. இவ்வாறு நோக்குகின்ற கோளாறுகள் பக்ஸ் (bugs) என்று அழைக்கப்படுகின்றது. கணினி புரோகிராம் ஒன்றில் 'பக்' எனப்படும் கோளாறு ஒன்று தோன்றுமாயின் அந்தக் கோளாறினைச் சீர் செய்வதற்குத் திருத்த வேண்டிய பகுதி எதுவாக இருக்கும் என்பதைக் கண்டுபிடிப்பது மிகவும் கஷ்டமானதாகும். எனவே, இதற்கென்றே விசேட கணினி மென்பொருள் அமைக்கப்பட்டுள்ளது. இவ்வாறு 'பக்ஸ்'ஸை கண்டுபிடிப்பதற்கென உருவாக்கப்பட்டுள்ள புரோகிராம்தான் 'டிபக்கர்ஸ்' எனப்படுகின்றது.






இப்பத்திரிகை கொழும்பு - 2, இல. 08, ஹுனுப்பிட்டிய குறுக்கு வீதி, விஜய நியூஸ்பேப்பர்ஸ் நிறுவனத்தினரால் 2011, ஜனவரி மாதம் 19 ஆம் திகதி புதன்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது.
Printed and Published by Wijeya Newspapers Ltd. No. 8, Hunupitiya Cross Road, Colombo - 02, on Wednesday January 19, 2011.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org